# தமிழ்

## தரம்

## 4

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதலாம் பதிப்பு - 2018

இரண்டாம் பதிப்பு - 2019

முழுப் பதிப்புரிமையுடையது.

ISBN 978-955-25-0055-8

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
இல. 107னு, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05 இல் உள்ள வரையறுக்கப்பட்ட
சொப்ட்வேவ பிரிண்டிங் அண்ட் பக்கேஜிங் பிரத்தியேக நிறுவனத்தில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

## முன்னுரை

நீங்கள் பிறந்திருப்பது இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படக்கூடிய ஒரு நாட்டிலாகும். உங்கள் நாட்டை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அது ஒரு சி றிய நாடாகத் தென்பட்டாலும் அதன் பெறுமதி விலைமதிப்பற்றதாகும். இவ்வாறான பெருமிதமிக்கதொரு மண்ணில் பிறந்துள்ள நீங்கள் அனைவரும் உண்மையிலேயே அதிஷ்டசாலிகள். மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் நன்கு கல்வி கற்று நற்குணமும் அறிவும் சக்தியும்மிக்க பிரசைகளாகி, எதிர்கால உலகை ஒளியூட்டுவீர்கள் என்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்பை அடைவதற்குக் கல்விக்கான சகல வசதிகளையும் இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அதன் ஒரு கட்டமாகவே இந்நூலையும் அது உங்களுக்கு வழங்குகின்றது.

ஆரம்பப் பிரிவுப் பாடத்திட்டத்திற்கேற்ப இதுவரைக்கும் தரம் 1, 2, 3, 4 இற்கான புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு தரம் 5 இற்கான புதிய பாடநூல்களின் அறிமுகத்துடன் ஆரம்பப் பாடத்திட்ட மறுசீரமைப்பு எனும் இக்கட்டம் நிறைவு பெறுகின்றது. தரம் 1 முதல் தரம் 5 வரை கற்கும் ஆரம்பப் பிரிவு மாணவருக்காக அரசு ஏறக்குறைய 30 வகையான பாடநூல்களைத் தயாரித்து வழங்குகின்றது. இவ்விலைமதிப்பற்ற வளத்தினைப் பயன்படுத்தி வாழ்க்கையை வளமானதாக ஆக்கிக் கொள்வது உங்கள் அனைவரினதும் கடமையாகும்.

இப்பாடநூலை உங்கள் கைகளில் தவழச்செய்வதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.01

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**
**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்**
**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**ஒருங்கிணைப்பு**
**யூ. எல். உவைஸ்**
உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**எழுத்தாளர் குழு**

**குகதாச சர்மா சிவகுமார்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - ஆரம்பக்கல்வி,
வலயக் கல்விப் பணிமனை - வலிகாமம்.

**எம். ஆர். எம். நவாஸ்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - ஆரம்பக்கல்வி,
வலயக் கல்விப் பணிமனை - மட்டக்களப்பு மத்தி.

**காந்திமதி துஷ்யந்தன்**
ஆசிரியர் - ஆரம்பக்கல்வி (ஓய்வு),
கொ/சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு.

**சிவப்பிரகாசம் ரூபன்**
ஆசிரியர் - ஆரம்பக்கல்வி,
வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

**இரா. கிஷாந்தி**
ஆசிரியர் - ஆரம்பக்கல்வி,
கம்பளை இந்துக் கல்லூரி, கம்பளை.

**பதிப்பாசிரியர் குழு**

**பேராசிரியர் எம். ஏ. நுஃமான்**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**யூ. எல். உவைஸ்**
உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வீ. என். எஸ். உதயச்சந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர் - ஆரம்பக்கல்வி,
தேசிய கல்வி நிறுவகம்.

**பதிப்பாசிரியர் (மொழி)**

**கலாநிதி சந்திரமோகன் கலாவள்ளி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.

**சரவைநோக்கு**

**லலிதாம்பிகை சண்முகநாதன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி,
கல்வி அமைச்சு.

**இறுதி மதிப்பீடு**

**லரீனா அப்துல் ஹக்**
விரிவுரையாளர்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்லோயா.

**எஸ். கேசவன்**
விரிவுரையாளர்,
சியன தேசிய கல்வியியற் கல்லூரி, வியாங்கொட.

**ரீ. சுரேஸ்குமார்**
ஆசிரியர் - ஆரம்பக்கல்வி,
கொ/டீ. எஸ். சேனநாயக்க கல்லூரி, கொழும்பு.

**ஓவியங்கள்**

**தினேஸ் கொடித்துவக்கு**
ஓவியர்

**கணினி வடிவமைப்பு**

**இரா. கவியாழினி**
கணினி வடிவமைப்பாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!


வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**– சுப்பிரமணிய பாரதியார் –**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | விழித்தெழு | 1 |
| 2 | எது வாழ்க்கை? | 5 |
| 3 | புதியதோர் உலகம் | 12 |
| 4 | களிப்போடு பயணம் செய்வோம் | 18 |
| 5 | எட்டுக்கோடு விளையாடுவோம் | 22 |
| 6 | வினோத வழக்கு | 28 |
| 7 | காய்கள் கட்டிய வெருளி | 35 |
| 8 | தாத்தாவுக்கு ஒரு கடிதம் | 39 |
| 9 | பழமொழிகள் | 43 |
| 10 | அழகிய வண்ணத்துப்பூச்சி | 50 |
| 11 | மூதுரை | 55 |
| 12 | கொடைக்குணமும் பரிவுணர்வும் | 59 |
| 13 | மெய்ப்பொருள் கல்வி | 66 |
| 14 | பண்டிகைகள் | 69 |
| 15 | இருளை ஒளியால் நிரப்பியவர் | 75 |
| 16 | பென்சிலாக நான் இருப்பேன் | 80 |
| 17 | தினக்குறிப்பு எழுதுவோம் | 85 |
| 18 | நாம் சென்ற கல்விச் சுற்றுலா | 91 |
| 19 | சிறுவர் பத்திரிகை | 97 |
| 20 | பலவீனத்தை வென்ற பலசாலி | 100 |
| 21 | பௌர்ணமியா? அமாவாசையா? | 105 |
| 22 | படித்துச் சுவைத்த நூல் | 109 |
| 23 | செம்மொழியாம் தமிழ் மொழி | 115 |
| 24 | பாரதியுடன் ஒரு பொழுது | 119 |

# 1 விழித்தெழு



காக்கை பாட்டுப் பாடவே
காலை நேரம் விடிந்தது
தூக்கம் போதும் தம்பியே
சோம்பல் ஏனோ எழுந்திடு!

ஊக்கம் கொண்டு உழைத்திடின்
உயர்ந்த வாழ்வு கிடைத்திடும்
தூக்கம் மிகுந்த சோம்பலால்
துவண்டு போகும் வாழ்க்கையே!

பூக்கள் மீது கும்பலாய்
புதிய தேனை உண்ணவே
ஈக்கள் கூடும் அழகு பார்
இன்னும் தூக்கம் ஏனடா?

சாரை சாரையாகவே
சலித்திடாமல் எறும்புகள்
ஓரமாகச் சென்றுமே
உழைத்துத் தின்னும் அழகு பார்!



தென்றல் வீசும் காலையில்
சீக்கிரம் நீ எழுந்திடு
உன்றன் பாடம் படித்திடு
உயர்ந்த அறிவைப் பெற்றிடு!

வளர்ந்து பின்னர் நீயுமே
வாலிபத்தை அடைந்ததும்
தளர்ந்திடாமல் உழைத்திடு
தக்க வாழ்வு கிடைக்குமே.

- கவிஞர் செல்லக் கணபதி

**அரும்பதம்**

உன்றன் - உனது



**பயிற்சி**

## 1.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.


1. மாணவர்கள் காலையில் எழுந்தவுடன் யாது செய்யவேண்டும் எனக் கவிஞர் கூறுகிறார்?
2. இப்பாடலின் மூலம் குறிப்பிடப்படும் காலைக்காட்சிகளைக் குறிப்பிடுக.
3. இப்பாடலில் கூறப்படும் எறும்பின் சிறப்பியல்பு யாது?
4. உயர்ந்த வாழ்வுபெற என்ன செய்ய வேண்டும் எனப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது?
5. இப்பாடலின் மூலம் நீர் பெற்றுக்கொள்ளும் படிப்பினை யாது?

**1.2 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பாடலிலிருந்து தெரிவுசெய்து எழுதுவோம்.**

| | | | |
|---|---|---|---|
| i. துயில் - ________ | ii. மலர்கள் - ________ |
| iii. எழில் - ________ | iv. சீவியம் - ________ |
| v. ஞானம் - ________ | vi. இளமை - ________ |
| vii. உதயம் - ________ | viii. கீதம் - ________ |
| ix. காற்று - ________ | x. சோர்வு - ________ |

**1.3 கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிப்போம்.**

- உயிரெழுத்துக்களைச் சுற்றி வட்டம் இடுக.
- மெய்யெழுத்துக்களின் மீது புள்ளடி இடுக.
- உயிர்மெய் எழுத்துக்களைச் சுற்றி முக்கோணி வரைக.
- ஆய்த எழுத்தைச் சுற்றிக் கட்டம் இடுக.



| | | | | |
|---|---|---|---|---|
| அ | மெ | வீ | த் | ஆ |
| ச் | ப் | டு | ல | ண் |
| ம் | கௌ | ஃ | தொ | வி |
| பு | ர் | த | ட் | இ |
| ஔ | ஒ | மு | போ | னு |

தமிழ் - 4

## 1.4 சேர்த்தெழுதுவோம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க் + | அ | = க | | ச் + | ஆ | = ____ |
| ட் + | இ | = ____ | | ண் + | ஈ | = ____ |
| த் + | உ | = ____ | | ந் + | ஊ | = ____ |
| ப் + | எ | = ____ | | ம் + | ஏ | = ____ |
| ர் + | ஐ | = ____ | | ல் + | ஒ | = ____ |
| ற் + | ஓ | = ____ | | வ் + | ஔ | = ____ |

## 1.5 பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியை நிரப்புவோம்.



| | | | | |
|---|---|---|---|---|
| வாழை | அலகு | குழி | வழி | முள்ளை |
| வாலை | அழகு | குளி | வலி | முல்லை |



i. நாய் ____________ ஆட்டியது.
குரங்கு ____________ ப்பழத்தைத் தின்றது.

ii. கிளியின் ____________ சிவப்பு நிறமானதாகும்.
மலர்களில் ரோசா மலர் ____________ நிறைந்தது.

iii. ஆடுகள் ____________ க்குள் விழுந்தன.
நாம் தினமும் ____________ க்க வேண்டும்.

iv. காயமடைந்த போர் வீரன் ____________ யால் துடித்தான்.
நாம் சரியான ____________ யில் செல்லவேண்டும்.

v. ____________ க் கொடிக்குத் தேர் கொடுத்தான், பாரி மன்னன்.
____________ முள்ளால்தான் எடுக்க வேண்டும்.

தமிழ் – 4

# 2 எது வாழ்க்கை?








தமிழ் - 4




உடனே வண்ணத்துப்பூச்சி...
3
மற்றவர் கண்குளிரப் பறந்து மகிழ்வதே வாழ்க்கை!
அப்படியா சொல்கிறாய்?



4
எறும்பும் தேனீயும்...
இல்லை, நீங்கள் கூறுவதெல்லாம் கிடையாது. உழைத்து உண்பதே வாழ்க்கை!
சரியாகச் சொன்னாய்!


தமிழ் - 4


5
இல்லை...
இல்லை!
வானைத் தொடுவதுபோல் உயர உயர வளர்வதுதான் வாழ்க்கை.


6
நீண்ட காலம் வாழ்ந்து, சிறந்த வாரிசுகளை உருவாக்குவதுதான் வாழ்க்கை.
அமைதியாக ஓடிக்கொண்டிருப்பதே வாழ்க்கை!


7
எனக்கு இன்னும் சந்தேகம் தீரவில்லை. வனக் கடவுளிடம் கேட்போம்.


வனக் கடவுள் தோன்றி...
8
அவரவர் திறமைக்கு ஏற்றவாறு, பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் மகிழ்ச்சியாக வாழ்வதே வாழ்க்கை.
சரியாகக் கூறினீர்கள்.

மூலம் : சுட்டி விகடன்

## 2.1 கீழ்வரும் கூற்றுகள் யாரால் கூறப்பட்டன என எழுதுவோம்.

i. ''பாடுவதே வாழ்க்கை'' ________

ii. "உயர வளர்வதுதான் வாழ்க்கை'' ________

iii. ''உழைத்து உண்பதே வாழ்க்கை'' ________

iv. ''அமைதியாக ஓடிக்கொண்டிருப்பதே வாழ்க்கை'' ________

v. ''மற்றவர் கண்குளிரப் பறந்து மகிழ்வதே வாழ்க்கை'' ________

## 2.2 கட்டத்தில் தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி நான்கு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்களை எழுதுவோம்.


நான் தமிழ்ப்

பாடத்தைப் பழங்கள் பத்திரிகை

சுவையான நாம் உண்டோம்

படித்தேன் படித்தோம் சிறுவர்

உண்டேன் வாசித்தேன்



i. ____________________

ii. ____________________

iii. ____________________

iv. ____________________

v. ____________________

## 2.3 கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிந்து கோடிடுவோம்.

i. மகிழ்ச்சி (சந்தோசம் / கவலை / குதூகலம் / களிப்பு)

ii. அகம் (புறம் / இல்லம் / வீடு / மனை)

iii. கோபம் (சினம் / சீற்றம் / சாந்தம் / ஆத்திரம்)

iv. காடு (கானகம் / நாடு / வனம் / அடவி)

v. உண்மை (மெய் / வாய்மை / பொய் / சத்தியம்)

## 2.4 பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளி நிரப்புவோம்.



| | | | | |
|---|---|---|---|---|
| உறை | எறிந்தான் | பரி | பரவை | பறித்தான் |
| கறி | பறவை | உரை | எரித்தாள் | கரி |



i. மயில் ______________ இனத்தைச் சேர்ந்தது.
கப்பல்கள் ______________ யில் பயணம் செல்லும்.

ii. கடிதம் ______________ யில் இருந்தது.
ஆசிரியர் நிகழ்த்திய ________ அனைவரையும் கவர்ந்தது.

iii. அம்மா சுவையான ______________ சமைத்தார்.
யானையின் மறு பெயர் ______________ ஆகும்.

iv. குதிரையின் வேறு பெயர் ______________ ஆகும்.
வரதன் மரத்தில் ஏறிப் பழம் ______________.

v. உதயா பந்தை மேலே ______________.
மேரி அடுப்பை நன்கு ______________.






இலவசப் பாடநூல்


## 2.5 படம் பார்த்துக் கதை கூறுவோம்.

**ஆசிரியரின் உதவியுடன் இக்கதையை எழுதுவோம். இக்கதையின் மூலம் நாம் பெறும் படிப்பினை யாது எனக் கலந்துரையாடுவோம்.**




குறிப்பு :-
- மேலே குறிப்பிடப்பட்டவைபோன்ற வேறு பயிற்சிகளையும் வழங்குக.
- மாணவர் அறிந்த எதிர்க்கருத்துச் சொற்கள்கொண்ட சிறிய புத்தகம் ஒன்றை ஆக்க வழிப்படுத்துக.

# 3 புதியதோர் உலகம்



காட்டில் சுட்டெரிக்கும் வெயில். அங்கு வாழும் விலங்குகளும் பறவைகளும் ஓரிடத்தில் கூடின. தலைவனான சிங்கம், ‘‘எல்லோரும் நான் சொல்வதைக் கேளுங்கள். நாம் உயிர்வாழ்வதற்கு நீர் அவசியம். ஆனால், இப்பொழுதெல்லாம் போதியளவு மழை பெய்வதில்லை. இதற்கெல்லாம் பிரதான காரணம் காடுகள் அழிக்கப்படுவதே’’ என்றது.

அப்போது, யானை வலம் இடமாகத் தலையை ஆட்டிக்கொண்டு, ‘‘காட்டை நாம் அழிப்பதில்லை! சில மனிதர்கள்தான் மரங்களை வெட்டிக் காட்டை அழிக்கிறார்கள்’’ எனப் புலம்பியது.

‘‘உண்மைதான்! அவர்கள் தங்கள் எதிர்காலச் சந்ததியின் வாழ்வை நினைத்துப் பார்ப்பதில்லை’’ என்றது புலி. பறவைகளும் ஏனைய விலங்குகளும் தலையை மேலும் கீழும் ஆட்டி அதனை ஏற்றுக் கொண்டன.

‘‘ஆமாம், அன்று தொலைநோக்குப் பார்வையுடன் அசோக சக்கரவர்த்தி வீதியோரங்களில் மரக்கன்றுகளை நட்டார். அதனால் நன்றாக மழை பொழிந்தது, விவசாயம் செழித்தது, மக்கள் வளமுடன் வாழ்ந்தனர்’’ என்றது மான்.

‘‘அப்படியானால், காடுகளைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்?’’ எனப் பறவைகள் கேட்டன. ‘‘கிளிகளே! கிடைக்கும் பழங்களையெல்லாம் தின்று அவற்றிலுள்ள விதைகளைக் காடெல்லாம் பரப்புங்கள்’’ என்றது சிங்கம்.

அப்போது காகங்கள், ‘‘சிங்கராசாவே நாங்கள் வேப்பமரம், ஆலமரம், அரசமரம் ஆகியவற்றின் பழங்களைத் தின்று நிலத்தில் எச்சமிட்டுக் கானகமெங்கும் விதைகளைப் பரப்புகிறோம்’’ என்றன.

‘‘நாங்கள் தும்பிக்கையால் தண்ணீர் ஊற்றுகிறோம்; விதைகள் முளைக்கட்டும்; செடிகள் வளரட்டும்; மரங்கள் வளர்ந்து காடே பசுமையாகட்டும்’’ என்றன யானைகள்.

‘‘இரவு பகலாகக் காட்டைக் காவல் காக்கும் பொறுப்பு எங்களுடையது’’ என்று கூறியது நரி.

‘‘நாம் அனைவரும் உயிர்மூச்சாகக்கொண்டு காட்டைக் காப்போம்’’ என்றது கரடி.

அனைவரும் தமது பொறுப்புகளை மிகவும் சிறப்புடன் செய்தனர். ஆண்டுகள் பல கழிந்தன. மரங்கள் செழித்து வளர்ந்தன. காடெங்கும் பசுமை! பசுமை...! திடீரென்று வானம் இருண்டது.

மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. காட்டில் உள்ள நீர்நிலைகள் அனைத்தும் நிரம்பின. விலங்குகளும் பறவைகளும் புதியதோர் உலகை உருவாக்கிவிட்ட மகிழ்ச்சியால் ஆடிப் பாடின.








## பயிற்சி

### 3.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. உயிர் வாழ்வதற்கு அவசியமானது எது?
2. அசோக சக்கரவர்த்தி மரங்களை நட்டதனால் நாட்டுக்கு கிடைத்த பயன்கள் எவை?
3. மரங்களைப் பாதுகாப்பதால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக?
4. காட்டை யார் அழிப்பதாக யானை குற்றம் சுமத்தியது?
5. காட்டைப் பாதுகாக்க யாது செய்ய வேண்டும் என இக்கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது?

**3.2** ''அன்று தொலைநோக்குப் பார்வையுடன் அசோக சக்கரவர்த்தி வீதியோரங்களில் மரக்கன்றுகளை நட்டார். அதனால் நன்றாக மழை பொழிந்தது, விவசாயம் செழித்தது, மக்கள் வளமுடன் வாழ்ந்தனர்'' **எனும் பந்தியிலுள்ள பின்வரும் எழுத்துக்களைக் கண்டுபிடித்து எழுதுவோம்.**

i. உயிரெழுத்துக்கள் - ______________________

ii. மெய்யெழுத்துக்கள் - ______________________

iii. உயிர்மெய் எழுத்துக்கள் - ______________________

**3.3 எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.**

i. மாணவன் - ____________ ii. தலைவன் - ____________

iii. நடிகை - ____________ iv. கணவன் - ____________

v. தோழி - ____________ vi. மகன் - ____________

vii. ஆசிரியை - ____________ viii. சிறுவன் - ____________

ix. மூத்தவள் - ____________ x. ஆண் - ____________

**சேர்த்து எழுதுவோம்.**

i. நாடு + பற்று - ________ ii. மரம் + கிளை - ________

iii. கண் + உடையார் - ________ iv. தீ + பொறி - ________

v. மஞ்சள் + பொடி - ________ vi. பால் + குடம் - ________

vii. பூ + மாலை - ________ viii. மண் + குடம் - ________

ix. பொன் + காசு - ________ x. அறிவு + இயல் - ________

## 3.4 தரப்பட்டுள்ள ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக எழுதுவோம்.

i. நான் தேநீர் குடித்தேன்.

________________________________________

ii. பட்டம் வானில் ஆடியாடிப் பறந்தது.

________________________________________

iii. அவன் நேற்றுப் படம் வரைந்தான்.

________________________________________

iv. குழந்தை மெல்ல மெல்லத் தவழ்ந்தது.

________________________________________

v. நீ சித்திரப் போட்டிக்குப் போவாயா?

________________________________________

## 3.5 பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளி நிரப்புவோம்.



| | | | | |
|---|---|---|---|---|
| ஆனி | மனம் | எண் | பானம் | பணி |
| பாணம் | பனி | ஆணி | மணம் | என் |



i. வேடன் எய்த ________ குறி தவறிச் சென்றது.
அதிக குளிரான ________ உடலுக்குத் தீங்கு விளைவிக்கும்.

ii. நான் ________ மாதம் பிறந்தநாளைக் கொண்டாடினேன்.
எனது தந்தை உடைந்த தளபாடங்களை ________அடித்துச் சீர் செய்தார்.

iii. பத்து என்பது ஓர் ________ ஆகும்.
________ தந்தை பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

iv. முற்றத்து மல்லிகை ________ பரப்பியது.
தாயின் ________ மிகவும் மென்மையானது.

v. பெற்றோரைப் பேணுதல் சிறந்த ________ ஆகும்.
மலை முகட்டில் ________ படர்ந்திருந்தது.

## 3.6 பின்வரும் தொனிகளுக்குரிய ஒவ்வொரு பிராணியினதும் இலக்கத்தை வெற்றுக் கூண்டில் எழுதுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i. | பிளிறும் | ☐ | ii. | சொல்லும் | ☐ |
| iii. | சீறும் | ☐ | iv. | பேசும் | ☐ |
| v. | அலறும் | ☐ | vi. | கதறும் | ☐ |
| vii. | ரீங்காரம் செய்யும் | ☐ | viii. | உறுமும் | ☐ |
| ix. | கனைக்கும் | ☐ | x. | கத்தும் | ☐ |

1 புலி 2 யானை 3 பசு 4 தவளை 5 தேனீ

6 பல்லி 7 கிளி 8 ஆந்தை 9 பாம்பு 10 குதிரை



### விகடத் துணுக்கு

***ஆசிரியர்*** : "நேற்று எதுவரைப் பாடம் நடத்தினேன்?"

***மாணவன்*** : "மணி அடிக்கும் வரைதான் சேர்."



**குறிப்பு :-**
- மேலே குறிப்பிடப்பட்டவை போன்ற வேறு பயிற்சிகளையும் வழங்குக.
- பிராணிகளின் ஒலிகளை நேரடியாகக் கேட்கக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும்.

# 4 களிப்போடு பயணம் செய்திடுவோம்




பாதையில் நாமும் போகையிலே
பார்த்துக் கவனமாய்ச் சென்றிடுவோம்
வீதியொழுங்கைப் பேணி நிதம்
விபத்திலிருந்து காத்திடுவோம்

கவனம் எங்கும் சிதறாமல்
பாதையின் வலப்புறம் நடந்திடுவோம்
வெள்ளைக் கோட்டைக் கவனிப்போம்
முறையாய்ப் பாதையைக் கடந்திடுவோம்

சிவப்பொளி கண்டால் நின்றிடுவோம்
மஞ்சள் ஒளியில் உசாராவோம்
உவக்கும் பச்சை ஒளி கண்டால்
உவகை கொண்டு புறப்படுவோம்

நீண்டு கிடக்கும் பாதையிலே
நடப்பதுங் கடப்பதுஞ் சுகந்தானே
கூண்டுக் கிளிபோல் கிடக்காமல்
களிப்போடு பயணம் செய்திடுவோம்.

*- எஸ். பாயிஸா அலி*





சிறுவர்களே!

**வீதி விபத்துக்களைத் தடுப்போம்.**



- வீதியில் கவனமாகச் செல்லுங்கள்.
- எப்போதும் வலப்புறம் நடந்து செல்லுங்கள்.
- வீதியில் விளையாடாதீர்கள்.
- வீதியில் பலர் சேர்ந்து கைகோர்த்து நடக்காதீர்கள்.
- வீதிக் கடவையால் அவதானமாக வீதியைக் கடவுங்கள்.



பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபை,
கொழும்பு.



## பயிற்சி

### 4.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. விபத்திலிருந்து எவ்வாறு எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்?
2. பாதசாரிகள் வீதியில் செல்லும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் எவை?
3. பாதையைக் கடக்க உதவும் கோட்டின் நிறம் என்ன எனப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது?
4. வீதியில் வாகனங்கள் புறப்பட்டுச் செல்ல அனுமதிக்கும் நிறம் எது?
5. வீதிச் சமிக்ஞை விளக்குகளின் மூன்று நிறங்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் எழுதுக.

### 4.2 பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களைப் பாடலிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.

i. கறுப்பு - ________________

ii. இடப்புறம் - ________________

iii. இருள் - ________________

iv. கவனயீனம் - ________________

v. துன்பம் - ________________



### 4.3 கீழ்வரும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துவோம்.



மான் தந்தை குதிரை பாத்திமா

ஆசிரியர் பூ வானம் அவர்



| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |
| | |
| | |
| | |

## 4.4 சொற்கோபுரம் அமைப்போம்.

i. முக்கனிகளில் ஒன்று

ii. சிற்பி செதுக்குவது


iii. கவிஞன் இயற்றுவது

iv. உழவுத் தொழில் செய்பவன்

v. அரசன் வாழும் இடம்

vi. சூரியனுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை

vii. திசையை அறிய உதவும் கருவி




## 4.5 பின்வரும் சொற்கள் அமையுமாறு கருத்துள்ள வாக்கியங்களை அமைப்போம்

i. வலி - ______________
வளி - ______________
வழி - ______________

ii. வால் - ______________
வாள் - ______________
வாழ் - ______________

iii. அலகு - ______________
அளகு - ______________
அழகு - ______________

iv. குலை - ______________
குழை - ______________

v. கலை - ______________
களை - ______________

v. மலை - ______________
மழை - ______________

### விகடத் துணுக்கு

***அப்பா*** : ''ஆபத்தில் யானை, குதிரை எல்லாம் கத்தவே கத்தாது ஏன் என்று கூறுங்கள்?''

***மகன்*** : ''யானை பிளிறும், குதிரை கனைக்கும்.''



# 5 எட்டுக்கோடு விளையாடுவோம்



கிராமிய விளையாட்டுக்கள், வீரத்தையும் விவேகத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவன. விளையாட்டில் சிறுவர், சிறுமியர், இளையோர், முதியோர் என எல்லோரும் ஈடுபடுகின்றனர். உடற்றிறனை வளர்க்க, உள்ளத்தில் ஆர்வத்தையும் மகிழ்ச்சியையும் ஒற்றுமையையும் குழு உணர்வையும் ஏற்படுத்தக் கிராமிய விளையாட்டுக்கள் துணைபுரிகின்றன.

இவ்விளையாட்டுகள் மூலம் அனுபவமும் திறனும் ஏற்படுகின்றன. அவ்வகையான பல்வேறு விளையாட்டுக்கள் கிராமந்தோறும் விளையாடப்படுகின்றன.





இலவசப் பாடநூல்

கிளித்தட்டு, கிட்டிப்புள், பல்லாங்குழி, தாயம்போடுதல், பசுவும் புலியும், தடயங்கூறி விளையாடுதல், எட்டுக்கோடு என்பன அவற்றுள் சிலவாகும். கிராமிய விளையாட்டுகளின் விதிமுறைகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப்படும்.

எட்டுக்கோடு சிறுவர்களால் விரும்பி ஆடப்படும் ஒரு கிராமிய விளையாட்டாகும். இவ்விளையாட்டுப் பொதுவாகத் திறந்தவெளியிலேயே விளையாடப்படுகின்றது. எட்டுக்கோடு விளையாட்டில் ஒரேநேரத்தில் எத்தனை பேரும் விளையாடலாம். இவ்விளையாட்டில் பங்கேற்கும் ஒவ்வொருவரும் தனித்தனிப் போட்டியாளர்களாவர்.

மைதானத்தில் சமனான எட்டுக் கட்டங்கள் அமையக்கூடியவாறு கோடுகள் வரையப்பட்டிருக்கும். எட்டுக் கட்டங்களில் இடதுபக்கம் நான்கு கட்டங்களும் வலதுபக்கம் நான்கு கட்டங்களும் இருக்கும். ஒவ்வொரு கட்டமும் ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்குக் கெந்திப் பாய்வதற்கு (ஒற்றைக் காலில் கெந்திப் பாய்தல்) வசதியாக அமைந்திருக்கும்.

இவ்விளையாட்டிற்குச் சிறிய மட்பாண்டத் துண்டொன்று பயன்படுத்தப்படும். இது ‘‘சிப்பி’’ என்று அழைக்கப்படும். இவ்விளையாட்டானது நான்கு சுற்றுகளாக விளையாடப்படும்.

விளையாட்டை இடது பக்கம் இருந்தே தொடங்க வேண்டும். இடது பக்கமாகப் போகும்போது ஐந்தாவது கட்டம், அதாவது வலது பக்கத்தின் மேலேயுள்ள கட்டம் வீடாகும். இங்கு இரு கால்களையும் நிலத்தில் வைத்து ஓய்வெடுக்கலாம்.

எட்டுக்கோடு விளையாட்டின் நான்கு சுற்றுகளையும் அறிந்து கொள்வோம்.

## முதலாவது சுற்று

சிப்பியை இடது பக்கமுள்ள முதலாவது கட்டத்தினுள் போடவேண்டும். அவ்வாறு போடும்போது சிப்பி கோடுகளில் வீழ்ந்து விடக்கூடாது. பின்னர் ஒற்றைக்காலால் கெந்தி, அந்தச் சிப்பியை மிதிக்க வேண்டும். மிதித்த சிப்பியை குனிந்து கையால் எடுத்துக்கொண்டு இரண்டாவது, மூன்றாவது, நான்காவது கட்டங்களுக்குள் ஒற்றைக் காலால் கெந்திச் சென்று, ஐந்தாவது கட்டத்தினுள் இரு கால்களையும் நிலத்தில் வைத்து ஓய்வெடுக்கலாம். பின்னர், ஆறாம் ஏழாம் எட்டாம் கட்டங்களினூடாக மீண்டும் கெந்தி வெளியேற வேண்டும். ஆறாம் ஏழாம் எட்டாம் கட்டங்களிற்குள் சிப்பியைப் போடும் போது இடதுபக்க மூலையில் நின்றே போட வேண்டும். இவ்வாறு எட்டுக் கட்டங்களையும் விளையாடினால் முதலாவது சுற்று நிறைவடையும்.

## இரண்டாவது சுற்று

இரண்டாவது சுற்றில் சிப்பியை முன்னரைப் போலவே கட்டத்தினுள் போட்டு ஒற்றைக்காலால் ஒரே கெந்தலில் மிதிக்க வேண்டும். மிதித்த சிப்பியைக் குனிந்து கையால் எடுத்து நிலம்படாது உயர்த்தி வைத்திருக்கும் கால் விரல்களின்மேல் வைத்துக்கொண்டு அடுத்த கட்டத்திற்குக் கெந்துதல் வேண்டும். கெந்தும்போது சிப்பி கீழே விழக்கூடாது. இவ்வாறு எட்டாவது கட்டத்திற்கு வந்ததும் சிப்பியைக் கட்டத்திற்கு வெளியில் போட்டு ஒரே கெந்தலில் சிப்பியை மிதிக்க வேண்டும். இவ்வாறு மிதிக்கையில் இரண்டாவது சுற்று நிறைவடையும்.

## மூன்றாவது சுற்று

மூன்றாவது சுற்றில் சிப்பியைத் தலையில் வைத்தபடி கண்களை மூடிக்கொண்டு கட்டங்களினூடாக நடக்க வேண்டும். அதன்போது

ஒரு காலை முதற் கட்டத்திலும் மற்றைய காலை இரண்டாம் கட்டத்திலும் வைத்து நடக்க வேண்டும். நடக்கும்போது, ''சரியா? சரியா?'' என்று கேட்க வேண்டும். பாதம் கோடுகளை மிதிக்கக்கூடாது. பாதம் கோடுகளில் மிதிபட்டால் ஏனைய போட்டியாளர்கள் ''பிழை'' என்பார்கள். (இவ்வாறு ''பிழை'' என்றதும் குறித்த போட்டியாளர் போட்டியில் இருந்து நீக்கப்படுவார்.) ஐந்தாவது கட்டத்தில் இரண்டு கால்களையும் வைத்து நின்று கண்களைத் திறந்து பார்க்க வேண்டும். பின்னர், ஆறாவது, ஏழாவது கட்டங்களைக் கடந்து எட்டாவது கட்டத்திற்கு வரவேண்டும். எட்டாவது கட்டத்திற்கு வந்ததும் தலையில் உள்ள சிப்பியைக் கட்டத்திற்கு வெளியில் வீழ்த்திவிட்டுக் கண்களைத் திறக்க வேண்டும். பின்னர், ஒரே கெந்தலில் சிப்பியை மிதிக்க வேண்டும். இவ்வாறு மிதிக்கையில் மூன்றாவது சுற்று நிறைவடையும்.

## நான்காவது சுற்று

நான்காவது சுற்றில் சிப்பியைக் கையில் வைத்துக்கொண்டு எட்டுக்கோட்டுக்கு வெளியில் புறமுதுகு காட்டி நிற்கவேண்டும். அந்நிலையில் சிப்பியைத் தலைக்கு மேலால் எட்டுக் கட்டங்களுக்குள் எறிய வேண்டும். (சிப்பி கோடுகளிலோ, வெளியிலோ, ஐந்தாவது கட்டத்திற்குள்ளோ விழக்கூடாது.)

இவ்வாறு எறிவதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். சிப்பி எந்தக் கட்டத்திற்குள் விழுகிறதோ அந்தக் கட்டம் உங்களுக்குச் சொந்தம். அது உங்கள் ''பழம்''. நீங்கள் அக்கட்டத்தினுள் இரு கால்களையும் நிலத்தில் வைத்து ஓய்வெடுக்கலாம். மற்றவர்கள் அதைக் கடந்துதான் போகமுடியும். இரண்டு பேருக்கு அடுத்தடுத்த கட்டங்களில் பழம் வந்துவிட்டால், மற்றவர்கள் இரண்டு கட்டங்களையும் கெந்திப் பாய்ந்து கடக்க வேண்டும். யார் கூடுதலான பழங்கள் எடுக்கின்றாரோ அவர் வெற்றி பெற்றவர் ஆவார்.



## பயிற்சி

### 5.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. கிராமிய விளையாட்டுக்கள் மூன்று தருக.
2. கிராமிய விளையாட்டுக்களின் சிறப்பம்சங்கள் எவை?
3. எட்டுக்கோடு விளையாட்டை எப்பக்கம் இருந்து விளையாடத் தொடங்க வேண்டும்?
4. இவ்விளையாட்டில் ஏற்படக்கூடிய தவறுகள் இரண்டு தருக.
5. கிராமிய விளையாட்டுக்கள்மூலம் கிடைக்கும் பயன்கள் மூன்றைக் குறிப்பிடுக.

### 5.2 கீழ்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் எழுதுவோம்.

i. சிறுவர்கள் - ____________________

ii. விளையாட்டு - ____________________

iii. இடதுபக்கம் - ____________________

iv. சிப்பி - ____________________

v. போட்டியாளர் - ____________________

### 5.3 உள்ளீட்டு மரபுப் பெயர்களை இனங்கண்டு, தரப்பட்ட இடைவெளியில் அவற்றை எழுதுவோம்.

i. நெல் - __________

ii. உழுந்து - __________

iii. மாம்பழம் - __________

iv. பலா - __________

v. கற்றாளை - __________



## 5.4 பிரித்து எழுதுவோம்.

i. வலப்பக்கம் - ____________

ii. கருநீலம் - ____________

iii. காட்டுவிலங்கு - ____________

iv. கடவுளிடம் - ____________

v. பண்புள்ள - ____________



## 5.5 பொருத்தமான பயனிலைச் சொல்லைத் தெரிந்தெடுத்து இடைவெளியில் எழுதுவோம்.

நீந்தின விளைந்தன குடித்தான்

வீசியது சென்றாள்

i. காற்று வேகமாக - ____________

ii. மீன்கள் குளத்தில் - ____________

iii. வயலில் நெற்கதிர்கள் - ____________

iv. அப்துல்லா பழரசம் - ____________

v. அமுதா பள்ளி - ____________

**விகடத் துணுக்கு**

***சிந்து*** : நீ பூனையை அழகாக வரைந்திருக்கிறாய். ஏன் வாயை மட்டும் வரையவில்லை?

***மைதிலி*** : அது வாயில்லாப் பிராணி.



தமிழ் - 4

# 6 வினோத வழக்கு

**காட்சி - I**

**பாத்திரங்கள் - நீதியரசர், முதலியார், பொலிசார், வாதி, பிரதிவாதி**

**இடம் - நீதிமன்றம்**

பொலிசார் : அமைதி! அமைதி! நீதியரசர் மன்றுக்கு வருகிறார். (எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். நீதியரசர் வந்து ஆசனத்தில் அமர்கிறார். மற்றவர்களும் அமர்கிறார்கள்.)

முதலியார் : டெங்குநுளம்பார்! டெங்குநுளம்பார்! டெங்குநுளம்பார்! (டெங்கு நுளம்பார் வந்து கூண்டில் நிற்கிறார்.)

நீதியரசர் : டெங்குநுளம்பார் என்ன குற்றம் செய்தார்? தெளிவாகச் சொல்லுங்கள், பொலிசாரே!

பொலிசார் : பிரபு! இவர் செய்தது கொலை முயற்சிக் குற்றம். டெங்குநுளம்பார் தனது தோழர்களுடன் சேர்ந்து ஆயிரத்திற்கு மேற்பட்டோருக்கு டெங்குக் காய்ச்சலை உண்டாக்கினார். பல நாட்களாக அந்த நோயாளிகள் படுக்கையில் இருந்தார்கள். இவர்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் இறந்துவிட்டார்கள். மேல் மாகாணத்தில் இவர்களால் பாதிக்கப்பட்டோர் மிக அதிகமாக உள்ளனர்.

நீதியரசர் : என்ன சொல்லுகிறீர் நுளம்பாரே! நீர் குற்றவாளியா? சுத்தவாளியா?

நுளம்பார் : நான் சுத்தவாளி! பிரபு.

நீதியரசர் : சரி, சாட்சிகளைக் கொண்டு வாருங்கள்.



தமிழ் - 4

## காட்சி - II

**பாத்திரங்கள் - நீதியரசர், முதலியார், பொலிசார், வாதி.**

(நோயாளி ஒருவர் வேறொருவரின் துணையுடன் நடந்து வந்து சாட்சிக் கூண்டில் நிற்கிறார். எல்லோரும் பரபரப்புடன் பார்க்கின்றனர்.)

நீதியரசர் : நீர்தான் சாட்சியோ? உமது பெயர் என்ன?

சாட்சி : என் பெயர் கண்ணன். எங்கள் வீட்டை அண்டிய பகுதிகளில் டெங்குநுளம்பாரும் அவரது தோழர்களும் அதிகமாக வசித்து வருகிறார்கள். காலை நேரங்களில் இவர்கள் எங்கள் வீடுகளுக்குள் எப்படியாவது நுழைந்துவிடுகின்றார்கள். அவர்களில் ஒருவர் குத்தியதால்தான் எனக்கு டெங்குக் காய்ச்சல் வந்ததாக வைத்தியர் சொன்னார்.

நுளம்பார் : நான் இதை மறுக்கிறேன், பிரபு. குத்துவதற்கு என்னிடம் ஊசி கிடையாது. எனது தோழர்களிடமும் கிடையாது.

பொலிசார் : ஊசி இல்லை என்றால், வேறு ஒரு கூரிய ஆயுதத்தினால் குத்தியிருக்கலாம். ஒருவேளை நுளம்பாரிடம் கூரிய உறுப்பு ஏதும் இருக்கக்கூடும். வைத்தியரிடம் கேட்கலாம், கனம் நீதியரசர் அவர்களே!

## காட்சி - III

**பாத்திரங்கள் - நீதியரசர், முதலியார், பொலிசார், வாதி, பிரதிவாதி, வைத்தியர்.**

(வைத்தியரும் சாட்சிக் கூண்டில் நிற்கிறார்.)

நீதியரசர் : வைத்தியரே! கண்ணனுக்கு என்ன காய்ச்சல் வந்தது, அது எதனால் ஏற்பட்டது?

வைத்தியர் : கண்ணனுக்கு வந்தது டெங்குக் காய்ச்சல். டெங்கு நுளம்பு குத்தியதால் இக்காய்ச்சல் ஏற்பட்டது. நுளம்புகள் குத்துவது ஊசியால் அன்று; அவை வாய் உறுப்பினால்தான் குத்துகின்றன.

நீதியரசர் : டெங்குநுளம்பாரே, நீர் சொல்வதற்கு ஏதும் உண்டா?

நுளம்பார் : நான் ஒரு குற்றமும் அறியேன் பிரபு! அரசாங்கம் எவ்வளவு கூறியும் கண்ணனும் அவரது குடும்பத்தாரும் அவர்களது வீட்டுச் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்கவில்லை. தயிர்ச்சட்டிகள், யோகட் கோப்பைகள், சிரட்டைகள், பிளாஸ்டிக் கொள்கலன்கள், பழைய தயர்கள் போன்றவற்றை அங்குமிங்கும் வீசியிருந்தார்கள். வடிகான்களைச் சுத்தம் செய்வதும் இல்லை. மழைக்காலங்களில் அவற்றுள் நீர் தேங்கியும் இருக்கும். அதுபோல் குளிர்சாதனப்பெட்டியில் உள்ள தட்டுகளிலும் நீர் தேங்கியிருக்கும். அவற்றையும் அவர்கள் சுத்தம் செய்வதில்லை.

இவ்வாறாக, நீர் தேங்கியிருக்கும் இடங்களில் எமது பெற்றோர் முட்டையிட்டு எம்மை வளர்த்தெடுத்தனர். நாம் உயிர்வாழ்வதற்கு இரத்தம் அவசியம் ஐயா! எமக்கு உயிர்வாழத் தேவையான இரத்தத்தை நாம் அருந்துகிறோம். எமது உணவை உட்கொள்வது இந்நாட்டில் ஒரு குற்றமா?

பொலிசார் : ஆனால், நாங்கள் எவ்வளவு மருந்து தூவியும் புகையடித்தும் நீங்கள் கண்ணன் வீட்டில் ஒளிந்திருந்து அவரைக் குத்தியது குற்றம் தானே?

நீதியரசர் : இப்பொழுது என்ன சொல்கின்றீர்? நுளம்பாரே!

நுளம்பார் : அப்படி ஒளிந்திருந்து குத்தியது உண்மைதான். மருந்து தூவியபோதும் புகையடித்தபோதும் நாங்கள் எமது உயிரைப் பாதுகாப்பதற்காக மறைவிடங்களில் பசியோடு ஒளிந்திருந்தோம். அவர்கள் வெளியே வரும்போது அவர்களைக் குத்தினோம். அதனால் டெங்குக் காய்ச்சல் வரும் என்பது எமக்குத் தெரியாது.

நீதியரசர் : டெங்குநுளம்பாரும் அவரது தோழர்களும் குற்றம் செய்திருக்கிறார்கள். ஆனால், கண்ணனின் குடும்பமும் டெங்குநுளம்புகள் பெருகுவதற்குக் காரணமாக இருந்தமை அதைவிடப் பெரிய குற்றமாகும். அதனால், கண்ணன் குடும்பத்தினரை நீதிமன்றத்திற்கு அபராதம் செலுத்துமாறு உத்தரவிடுகிறேன்.

மேலும், டெங்குநுளம்பார் தான் செய்தது குற்றம் என்று அறிந்திருக்கவில்லை. இருப்பினும், அவர் செய்தது கொலை முயற்சிக் குற்றம். அதற்காக, அவரைத் தமது இனசனத்தோடு இந்த நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளை இடுகிறேன். அதற்கு இரண்டு நாட்கள் அவகாசம் கொடுக்கிறேன். வெளியேறாது விட்டால், பலவந்தமாக அவர்களை வெளியேற்ற வேண்டிவரும். அதன்போது அவர்களில் பலர் இறக்கவும் நேரிடும்.

ஆகவே, விரைவாக அவர்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்த நீதிமன்றம் சுகாதாரப்பிரிவிற்கும் பொலிசாருக்கும் உத்தரவிடு கின்றது.

இத்துடன் நீதிமன்றம் கலைகிறது.

(திரை மூடப்படுகின்றது.)



**பயிற்சி**

## 6.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. டெங்குக்காய்ச்சல் எதன் மூலம் பரவுகிறது?
2. இலங்கையில் டெங்குநுளம்பினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணம் எது எனப் பொலிசார் குறிப்பிடுகிறார்?
3. டெங்குநுளம்பு பரவுவதற்கு ஏதுவாக வீட்டுச் சுற்றுப்புறத்தில் காணப்படும் பொருள்கள் மூன்றைக் குறிப்பிடுக.
4. டெங்குநுளம்பை ஒழிக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. இவ்வழக்கில் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு யாது?

## 6.2 பொதுப்பாற் சொற்களைப் பாடத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.

i. ______________________

ii. ______________________

iii. ______________________

iv. ______________________

v. ______________________



**6.3 தொடர்பை அவதானித்து வெற்றிடத்திற்கு வரவேண்டிய சொல்லைக் கட்டத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.**



தீபாவளி வீரம் கோட்டை
குளவி கறுப்பு



i. வனம் → வாசனை → விறகு → ______________

ii. கேள்வி → கைதி → கொம்பு → ______________

iii. தீ → தீமை → தீபம் → ______________

iv. உறுப்பு → மறுப்பு → வெறுப்பு → ______________

v. அழகு → கும்மி → மிளகு → ______________

**6.4 பின்வரும் சொற்களில் தன்மைச் சொற்களைச் சுற்றி வட்டமிடுவோம். முன்னிலைச் சொற்களின் கீழ்க் கோடிடுவோம். படர்க்கைச் சொற்களுக்குக் கட்டமிடுவோம்.**

நான் நாம் யாம் அது
நாங்கள் நீ அவர் மதன்
நீவிர் நீங்கள் மரம்



**6.5 ஆசிரியரின் உதவியுடன் இக்கதைச் சம்பவத்தை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.**

# 7 காய்கள் கட்டிய வெருளி





கந்தன் செய்த தோட்டத்தில்
காய்கள் கனிகள் அதிகமாம்
வந்து ஆடு மாடுகள்
வளர்ந்தவற்றைக் கடிக்குமாம்

காய்கள் ஒன்று கூடியே
காக்க வெருளி கட்டின
வாய்கள் திறந்து பேசின
வழி வகுத்துக் கொண்டன



சாம்பல் நீற்றுப் பூசனி
தலைக்கு வருவேன் என்றது
பாம்பு போன்ற புடலங்காய்
பக்கக் கைகள் என்றது





பானை போன்ற பூசனி
பருத்த வயிறு என்றது
ஆனை மிளகாய்களும்
அழகு மூக்காய் ஆகின

வெண்டிக்காய்கள் நாங்கள் தாம்
விரல்கள் என்று தொங்கின
நொண்டிக் கால்கள் ஆயின
நுனி வளர்ந்த கரும்புகள்





கனிந்த நிறத் தக்காளி
கன்னம் என்று நின்றது
நனைந்த பயிற்றங் காய்களும்
நாலு மயிராயின

முறுக்கு மீசை இல்லையென்று
முணுமுணுத்துக் கொள்ளவே
நறுக்கி வைத்த அறுகம்புல்
நானிருப்பேன் என்றது





கண்ணில்லாத வெருளி என்று
காய்கள் கவலை கொண்டன
அண்ணன் நாவற் பழவனார்
அதற்கு வந்து குந்தினார்

மாடு வந்து பார்த்தது
மனிதன் மீசை கண்டது
நாடு காடு தாண்டியே
நாலு காலிற் பாய்ந்தது.

- பண்டிதர் க.சச்சிதானந்தன்





## பயிற்சி

### 7.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. காய்கள் ஒன்றுகூடி வெருளியை உருவாக்கியது ஏன்?
2. இப்பாடலில், மனித உடல் உறுப்புக்களுக்கு இணையாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் காய்கறிகள் எவை?
3. இப்பாடலின் ஆசிரியர் யார்?
4. வெருளியின் விரல்கள் போன்று இருப்பன எவை?
5. வெருளி கட்டியபின் தோட்டத்திற்கு வந்த மாடு எதைக் கண்டு பாய்ந்தோடியது?

### 7.2 கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கட்டத்திலிருந்து தெரிந்தெடுப்போம்.

பாம்பு என்பதன் ஒத்தகருத்துச் சொல்

செலவு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

திருடர்களிடமிருந்து வீட்டைப் பாதுகாக்கத் தேவையான ஒன்று

நிறங்களில் ஒன்று

துன்பம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்

கோலம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

நீரில் மலரும் பூ

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ர | வ | ம் | க | ப் | ல் |
| ல | ப் | ர | த | று | மு | ர் |
| ங் | பா | வு | த் | ப் | த் | இ |
| கோ | ன் | ர | தா | பு | த | ன் |
| ல | ல் | ம | ல் | ம் | மி | ன |
| ம் | ரை | ப் | ர் | ட் | ழ் | ல் |



தமிழ் – 4

**7.3 பின்வரும் காய்கறிகள் வெருளியின் எவ்வுறுப்புகளாகக் காணப்பட்டன எனப் பாடலிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.**

i. சாம்பல் நீற்றுப் பூசனி - தலை

ii. நாவற்பழம் - ____________

iii. பானை போன்ற பூசனி - ____________

iv. ஆனைமிளகாய் - ____________

v. கனிந்தநிறத் தக்காளி - ____________

**7.4 அட்டவணையைப் பூரணப்படுத்துவோம்.**

| வினையடி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| படி | படித்தேன் | படிக்கின்றேன் | படிப்பேன் |
| எழுது | | | |
| ஓடு | | | |
| விழு | | | |
| நில் | | | |
| ஏறு | | | |
| இரு | | | |
| வரை | | | |
| கல் | | | |


**7.5 பின்வருவன எவ்வாறு தன்னை அறிமுகம் செய்யும் என எழுதுவோம்.**



எனது பெயர் பூசனிக்காய்

____________


____________



____________

____________


____________



____________

____________

____________



____________

____________

____________

# 8 தாத்தாவுக்கு ஒரு கடிதம்



க. பொற்கொடி,
இல 32, பிரதான வீதி,
கொழும்பு - 12.
02. 02. 2019.

அன்புள்ள தாத்தா,

வீட்டில் நாங்கள் அனைவரும் சுகமாக இருக்கிறோம். நீங்களும் பாட்டியும் சுகமாக இருக்க இறைவனை வேண்டுகின்றேன். மேலும், நீங்கள் அனுப்பியிருந்த விளையாட்டுப் பொருள்கள் கிடைத்தன. அவை மிகவும் அழகானவை. நான் அவற்றை எனது நண்பர்களுக்குக் காட்டி மகிழ்ந்தேன்.

இம்முறை விடுமுறைக்கு நாங்கள் அங்கே வருகின்றோம். உங்களுக்கும் பாட்டிக்கும் புத்தாடை வாங்கியிருக்கிறோம். உங்களுக்கு வேறு என்ன வேண்டும்? விரிவாக எழுதுங்கள். கொண்டுவருகின்றோம்.

பாட்டி! முழங்கால் வலி எப்படி இருக்கிறது? நேரத்திற்குச் சாப்பிடுங்கள். நன்றாக ஓய்வெடுங்கள். அத்துடன், தாத்தா சென்றமுறை நான் நட்டு வைத்த மரம் வளர்ந்திருக்கிறதா? இம்முறையும் அங்கு வந்து நண்பர்களுடன் குளத்துக்குச் சென்று நீராடுவோம். மீன்பிடித்து விளையாடுவோம். நாங்கள் அங்கு வருவதற்கும்; உங்களைக் காண்பதற்கும் மிகவும் ஆவலாக இருக்கின்றோம்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள பேர்த்தி,
க. பொற்கொடி.



## பயிற்சி

### 8.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. கடிதத்தின் மறுபெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. கடிதம் அனுப்புபவரின் முகவரி கடிதத்தில் எங்கு எழுதப்படல் வேண்டும்?
3. கடிதத்தை எழுதுபவரின் கையொப்பம் எங்கு இடப்படல் வேண்டும்?
4. கடிதத்தின் பிரதான பகுதிகள் எவை?
5. கடித உறையில் இடம்பெற வேண்டிய விடயங்கள் யாவை?

### 8.2 இக்கடிதத்திலுள்ள நிறுத்தக்குறிகளை இனங்காண்போம். அட்டவணையைப் பூர்த்திசெய்வோம்.

| இல | நிறுத்தக்குறிகள் | நிறுத்தக்குறிகளின் பெயர்கள் |
|---|---|---|
| i. | | |
| ii. | | |
| iii. | | |
| iv. | | |



### 8.3 கீழே தரப்பட்டுள்ளவை அறிவித்தல்கள் ஆயின் ☼ எனவும் அறிவுறுத்தல்கள் ஆயின் △ எனவும் அடையாளம் இடுவோம்.

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. (   )

ii. வீதியின் வலதுபுறமாக நடந்து செல்லுங்கள். (   )

iii. எதிர்வரும் சனிக்கிழமை பெற்றோர்களுக்கான கூட்டம் நடைபெறும். (   )

iv. உங்கள் சுட்டெண்ணை இந்த அடைப்புக்குள் எழுதவும். (   )

v. நாளை நாடு பூராகவும் இடியுடன்கூடிய மழை பெய்யும். (   )

## 8.4 பின்வரும் படங்களின் திணை, பால், எண் ஆகியவற்றை எழுதுவோம்.

| | | |
|---|---|---|
|  | திணை | |
| | பால் | |
| | எண் | |

| | | |
|---|---|---|
|  | திணை | |
| | பால் | |
| | எண் | |

| | | |
|---|---|---|
|  | திணை | |
| | பால் | |
| | எண் | |

| | | |
|---|---|---|
|  | திணை | |
| | பால் | |
| | எண் | |

| | | |
|---|---|---|
|  | திணை | |
| | பால் | |
| | எண் | |

| | | |
|---|---|---|
|  | திணை | |
| | பால் | |
| | எண் | |

## 8.5 பின்வரும் விடயங்களை ஒழுங்குபடுத்தி, கடிதமொன்றை எழுதுவோம்.

வா. இனியவன்,
இல.**18**, கண்டி வீதி,
மாத்தளை.

2018.04.02.

அன்புள்ள அப்பா வணக்கம்.

இப்படிக்கு,


உங்கள் அன்பு மகன்,
வா. இனியவன்.

நான் நலம். உங்கள் நலமறிய ஆவலாக உள்ளேன்.

நான் நன்றாகப் படிக்கின்றேன். அடுத்த மாதம் கல்விச் சுற்றுலா செல்ல உள்ளேன். அதற்குப் பெற்றோரின் அனுமதிக் கடிதத்தைக் கொண்டுவருமாறு வகுப்பாசிரியர் கூறியுள்ளார். அனுமதிக் கடிதத்தை எழுதி விரைவாக எனக்கு அனுப்பி வையுங்கள்.

சுற்றுலா முடிந்து வந்ததும் விரிவாக எழுதுகிறேன்.

## தெரிந்து கொள்வோம்






# 9 பழமொழிகள்



பாடசாலை விடுமுறையில் சிறுவர்கள் தமது கிராமத்திற்குச் சென்றார்கள். அங்கு குளங்கள், ஆறுகள், வயல்வெளிகள், மரஞ் செடிகள் முதலியன காணப்பட்டன. சிறுவர்கள் அவற்றைப் பார்த்து இரசித்தபடி சென்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது வயலிலே வேலை செய்துகொண்டிருந்த மாமாவைக் கண்டார்கள்.

**மாமா** : (சிறுவர்களைப் பார்த்து) பட்டணத்துப் பட்டாம் பூச்சிகள் ஏன் இந்த வயல்வெளிப் பக்கம் வந்திருக்கிறீர்கள்?

**தீனா** : வயல்வெளியைக் கண்டு இரசிக்க வந்தோம் மாமா. எருதுகளை வைத்து நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

**மாமா** : நிலத்தில் பயிரிடுவதற்காக எருதுகொண்டு உழுகிறேன்.

**பவி** : ஏன் மாமா! நிலத்தை உழுதல் வேண்டும்?

**மாமா** : அதுவா? ''சீரைத்தேடின் ஏரைத்தேடு'' என்பார்களே! பயிரிடுவதற்கு முன் மண்ணை ஆழமாகப் பண்படுத்த வேண்டும். அதனால்தான் ''அகல உழுவதைவிட ஆழ உழுவதே நன்று'' என்பார்கள். இதன் மூலம் நிலத்தைப் பண்படுத்தி பயிர்களின் விளைச்சலையும் அதிகரிக்க முடியும். இதை நீங்கள் அறிந்ததில்லையா?

**தீனா** : அறிந்திருக்கிறேன் மாமா. வருடத்தின் எல்லா காலத்திலும் பயிர் செய்வீர்களா?

**மாமா** : ''ஆடிப்பட்டம் தேடி விதை, பருவத்தே பயிர் செய்'' என்னும் பழமொழிகளுக்கேற்ப உரிய காலத்தே பயிர்செய்து பயன் கண்டனர் நம் முன்னோர்கள்.

**பவி** : எல்லா விதைகளையும் விதைக்கலாமா மாமா?

**மாமா** : இல்லை, நல்ல தரமான விதைகளைத் தெரிவுசெய்து விதைக்க வேண்டும். ''காய்ந்த விதைக்குப் பழுதில்லை'' என்பார்கள் நம் முன்னோர்கள். ''அடர விதைத்து சிதறப் பிடுங்க வேண்டும்'' என்றும் கூறுவார்கள்.

**பவி** : நீரைப்பெற என்ன செய்வீர்கள் மாமா?

**மாமா** : வாய்க்காலின் வழியே குளத்து நீரை வயல்களுக்குப் பாய்ச்சுவோம்.

**தீனா** : மழை நீரையும் பயன்படுத்தலாம் தானே, மாமா!

**மாமா** : நிச்சயமாக! மழை நீரையும் பயன்படுத்தலாம். நீர்வளம் குறைந்த நிலத்தை ''வானம் பார்த்த பூமி'' என விவசாயிகள் கூறுவர். அந்நிலத்தில் மழை நீரை மட்டும் நம்பியே விவசாயம் செய்கிறார்கள்.

**பவி** : மாமா! நெல்லுடன் சேர்ந்து களைகள் வளர்வதில்லையா?

**மாமா** : நிச்சயமாக! பயிர்கள் வளரும்போது அதனிடையே வேண்டாத களைகளும் வளரும். அவற்றை வேருடன் களைதல் வேண்டும். இல்லையெனில், அவை பயிர்களுக்கு ஊறு விளைவிக்கும். எனவேதான், ''களையை முளையிலே கிள்ளு'' எனக் கூறியதோடு ''களை பிடுங்காத பயிர் கால்பயிர்'' எனவும் கூறினர்.

**தீனா** : மாமா! ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பழமொழி சொன்னீர்கள்! உரம் இடுவதற்கு ஏதேனும் பழமொழி இருக்கிறதா?

**மாமா** : ஆம்! அதற்கும் பழமொழி இருக்கிறது. உரிய பருவத்தில் ''ஏரினும் நன்று எருவிடல்'', என்பதற்கு இணங்க உரம் இடுதல் வேண்டும்.

**பவி** : மாமா! இயற்கை உரம்தானே சிறந்தது?

**மாமா** : ஆம், இயற்கை உரமே சூழல் நேயமானது. அதனால்தான், நம் முன்னோர்கள் ஆட்டுப் பிழுக்கை, மாட்டுச்சாணம் போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள்.

**தீனா** : மாமா! உழவுத் தொழில் மிகவும் கடினமானதா?

**மாமா** : விரும்பி எதைச் செய்தாலும் அது கடினமாகாது. உழவன் சேற்றில் காலை வைத்தால்தான் நாம் சோற்றில் கைவைக்க முடியும். ''உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை'' என்பது முன்னோர் வாக்கு.

**பவி** : பயிர்களைப் பாதுகாக்க வேண்டும் தானே, மாமா?

**மாமா** : ஆமாம்! பயிர்களைப் பூச்சிகள் தாக்காமலும் கால்நடைகள் மேய்ந்து சேதப்படுத்தாமலும் பாதுகாத்தல் வேண்டும். இதனையே ''கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்'' என்பர் நம் முன்னோர்.

**இருவரும் :** ஆமாம்! நாங்கள் இன்று நிறைய விடயங்களை அறிந்து கொண்டோம். உங்களுக்கு மிகவும் நன்றி! போய் வருகிறோம், மாமா.

## மேலதிக அறிவுக்கு

**பழமொழிகள்**

1. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
2. அலைமோதும்போதே தலைமுழுகு.
3. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
5. சிறுதுளி பெருவெள்ளம்.
6. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.



7. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
8. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
9. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
10. விளையும் பயிரை முளையிலே தெரியும்.



## பயிற்சி

### 9.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. சிறுவர்கள் கிராமத்தில் கண்டு இரசித்தவை யாவை?
2. இயற்கை உரங்கள் இரண்டு தருக.
3. ''பருவத்தே பயிர் செய்'' என்பதன் பொருள் என்ன?
4. நீர் வளம் குறைந்த நிலத்தை எவ்வாறு அழைப்பர்?
5. இவ்வுரையாடலில் உமக்கு பிடித்த பழமொழிகள் இரண்டு தருக.

**9.2 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பாடத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.**

| | |
|---|---|
| i. கழனி - ____________ | ii. கமத்தொழில்- ____________ |
| iii. புனல் - ____________ | iv. அன்னம் - ____________ |
| v. ஆகாயம் - ____________ | vi. நகரம் - ____________ |
| vii. தரணி - ____________ | viii. காலம் - ____________ |
| ix. உலர்ந்த - ____________ | x. பசளை - ____________ |

**9.3 பழமொழிகளுக்குரிய கருத்தை எழுதுவோம்.**

i. இளங்கன்று பயமறியாது.

____________________________________________

ii. அழுத பிள்ளை பால் குடிக்கும்.

____________________________________________

iii. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

____________________________________________

iv. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.

____________________________________________

v. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.

____________________________________________

## 9.4 தரப்பட்ட வாக்கியத்தை வாசித்து இடைவெளிகளை நிரப்புவோம்.

1. அரசன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான்.




திணை - ______________________
பால் - ______________________
எண் - ______________________
இடம் - ______________________
காலம் - ______________________

2. சிறுவர்கள் உணவு உண்கின்றார்கள்.



திணை - ______________________
பால் - ______________________
எண் - ______________________
இடம் - ______________________
காலம் - ______________________

3. புறா தானியங்களை உண்ணுகின்றது.



திணை - ______________________
பால் - ______________________
எண் - ______________________
இடம் - ______________________
காலம் - ______________________

4. வெள்ளை நிறப் பூக்கள் அழகாக இருக்கின்றன.



திணை - ______________________
பால் - ______________________
எண் - ______________________
இடம் - ______________________
காலம் - ______________________

## மேலதிக அறிவுக்கு

### விடுகதைகள்

1. என்னை நீங்கள் பார்க்கலாம்; தொடலாம்; ஆனால் பிடிக்க முடியாது. நான் யார்?
2. மழையில் நனைவேன் நான்; வெயிலில் காய்வேன் நான்; வெளியில் மலர்வேன் நான்; வீட்டில் சுருங்குவேன் நான். நான் யார்?
3. வீட்டில் இருப்பான் ஒரு காவலாளி; வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி. அவர்கள் யாவர்?
4. மொட்டைப் பாட்டிக்கு உச்சியிலே குடுமி. அது என்ன?



5. நீட்டிக் கொண்டு நீளமாகவும் படுப்பேன். சுருட்டிக்கொண்டு மூலையிலும் நிற்பேன். நான் யார்?

**விடைகள் :**

**பாய், தேங்காய், நிழல், குடை, பூட்டும் திறப்பும்**

### 9.5 விடுகதைகளுக்கான விடைகளைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புவோம்.

i. தாளைக் கொடுத்தால் உண்ணும்;
தண்ணீர் கொடுத்தால் மடியும்.

ii. வயலுக்கு எல்லையாவான்;
தன் தலையையே நடக்கக் கொடுப்பான்.

iii. பாரினில் வந்து சேரும் முன்னே
பத்துத் மாதம் சிறைவாசம்.

iv. சாண் உயரச் சிறுவன்
வைத்ததெல்லாம் சமைப்பான்.

v. படகுக்குக் கையாவான்;
பயணத்துக்கு உதவுவான்.

| | | | | |
|---|---|---|---|---|
| i | | | ப் | பு |
| ii | | | ப் | பு |
| iii | | | ப் | பு |
| iv | | | ப் | பு |
| v | | | ப் | பு |

# 10 அழகிய வண்ணத்துப்பூச்சி



சீலன், நான்காம் தரத்தில் கற்கும் ஒரு சிறுவனாவான். ஒருநாள் சீலனும் சித்திராவும் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஓர் அழகிய வண்ணத்துப்பூச்சி அவர்களுக்கு முன்னால் சிறகடித்துப் பறந்து சென்றது. அதனைக் கண்ட இருவரும் அதனைப் பின்தொடர்ந்து ஓடினார்கள். சிறிது தூரம் பறந்த வண்ணத்துப் பூச்சி மாயமாக மறைந்து விட்டது. இருவரும் சுற்றும் முற்றும் பார்த்தனர். அவர்களால் அதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போது, "தம்பி!" என்றொரு குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் சீலன். "நான் வண்ணத்துப்பூச்சி பேசுகிறேன்", என்று மீண்டும் அக்குரல் ஒலித்தது.





இலவசப் பாடநூல்

அவன் ஆச்சரியத்துடன் நோக்கினான். பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட அவன், "வண்ணத்துப்பூச்சியே! நீ வானவில்லைப்போல அழகாக இருக்கிறாய்" என்றான். அதற்கு வண்ணத்துப்பூச்சி, "என் அழகு மட்டுமே உனக்குத் தெரிகின்றது. எனக்குள்ள ஆபத்துக்களை நீ அறிவாயா?" என்று கேட்டது. இதைக் கேட்ட சீலன், "என்ன! உனக்கு ஆபத்தா? அதைப்பற்றிச் சொல்வாயா?" எனக் கேட்டான்.

வண்ணத்துப்பூச்சி கூறத்தொடங்கியது. நாங்கள் பூக்களில் உள்ள தேனைக் குடிப்பவர்கள். எங்கள் குடும்பம் மிகவும் பெரியது. அழகிய நந்தவனமே எங்கள் இருப்பிடம். நீண்ட நாட்களாக நாங்கள் ஒற்றுமையாக அந்த நந்தவனத்தில் வசித்து வந்தோம். வண்ண வண்ணப் பூக்களின் மணமும் எமது அழகும் காண்போரைப் பரவசப்படுத்தும். அண்மையில், நாங்கள் குடியிருந்த நந்தவனம் சில மனிதர்களால் அழிக்கப்பட்டது. இதனால் எமது உறவினர்கள் வெவ்வேறு திசைகளை நோக்கிப் பிரிந்து சென்றுவிட்டனர்.

இயற்கையைப் பேணிப் பாதுகாப்பதற்கு மனிதர்கள் ஒத்துழைப் பதில்லை. இவ்வாறான செயல்களால், எமது இருப்பிடத்தை விட்டு நாம் விரட்டப்பட்டுள்ளோம். பூக்களைத் தேடி நீண்ட தூரம் பயணிக்கிறோம். உணவிற்காக வாழ்நாள் முழுவதும் அங்குமிங்கும் அலைகிறோம். அதனால் எமது வாழ்க்கை மிகவும் கடினமானதாகிவிட்டது.

இதைக் கேட்டதும் சித்திரா கவலையடைந்தாள். பின்னர் "வண்ணத்துப்பூச்சியே! உனது பூர்வீகம் பற்றிக் கூறுவாயா?" என்று கேட்டாள். ஆம், எனது பூர்வீகம் பற்றிக் கூறுகிறேன் கேள். ஒரு வண்ணத்துப்பூச்சி பசுமையான இலையொன்றின் கீழ் முட்டை யிட்டது. சூரிய வெப்பத்தினால் அதிலிருந்து ஒரு குடம்பியாக வெளியேறினேன். அந்நிலையில் பசிய இலைகளை நான் உணவாக உண்டேன்.

நான் குடம்பியாக இருக்கும்போது உடம்பில் மயிர்கள் இருக்கும். உடல் பச்சை நிறத்தில் அல்லது பழுப்பு நிறத்தில் இருக்கும். 'மயிர்கொட்டிப் புழு' என மனிதர்கள் எல்லோரும் என்னை அழைப்பார்கள். எங்களது மயிர் பட்டால் உடல் அரிப்பெடுப்பதுடன் தோல் தடித்து ஒவ்வாமையும் ஏற்படும். இதனால் மனிதர்கள் எம்மை வெறுப்பார்கள். எம்மினத்தவரை அழிப்பார்கள்.

நாட்கள் சில சென்றபின்னர் கூட்டுப்புழுவாக உருமாறினேன். அப்போது எனது உடம்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. தலை, மார்பு, வயிறு என்பனவும் இறக்கைகளும் உருவாகத் தொடங்கின.

இறக்கைகள் வளர்ச்சியடைந்ததும் கூட்டைப் பிரித்தபடி நிறையுடலியாக வெளியேறினேன். இப்போது இலைகளை என்னால் உண்ண முடியாது. மாறாக, பூக்களில் உள்ள தேனை மட்டுமே உறிஞ்சிக் குடிக்க முடியும்.

இன்று காலை, அருகிலுள்ள பூங்காவில் தேன் கிடைக்கவில்லை. சற்றுத்தொலைவிலுள்ள வண்ணமலர்ப்பூங்காவிற்குச் சென்றேன். அங்கே தேன் குடிப்பதற்காகப் பூவொன்றின் மீது அமர்ந்தபோது, 'வண்ணத்துப்பூச்சியைப் பிடித்துவிட்டோம்' எனச் சிறுவர்கள் சத்தமிட்டார்கள். அங்கே வண்ணத்துப்பூச்சியொன்றின் இறக்கைளை சிறுவன் ஒருவன் இருவிரல்களினாலும் பிடித்திருந்தான். வண்ணத்துப்பூச்சியின் துன்பத்தைச் சிறிதும் உணராமல் கூடியிருந்த சிறுவர்கள் ஆரவாரித்துக் கொண்டிருந்தனர். நான் பயத்துடன் அவ்விடத்தைவிட்டு வேகமாகப் பறந்து இங்கு வந்தேன். என துக்கம் மேலிடக் கூறியது. மூவரும் துக்கத்தால் ஒருவரை ஒருவர் பார்த்தபடி மௌனமாக நின்றனர். சிறிது நேரத்தின் பின்னர் வண்ணத்துப் பூச்சி "தம்பி" என்று மௌனத்தை முதலில் கலைத்தது. இருவரும் சோகத்துடன் அதனை நோக்கினர்.

அந்த அழகிய வண்ணத்துப்பூச்சியோ "எனக்குப் பசிக்கின்றது நான் சென்று வரட்டுமா?" என்று கூறியபடி அருகிலுள்ள பூஞ்செடிக்குப் பறந்து சென்றது. அது மறையும்வரை சீலனும்

சித்திராவும் அதனைப் பார்த்துக் கையசைத்துக்கொண்டிருந்தார்கள். மனிதர்களிடத்தில் உயிர்கள் மீது அன்பு இல்லாமற் போனதை எண்ணி சீலனும் சித்திராவும் கவலையுடன் வீடு திரும்பினர்.



**பயிற்சி**

## 10.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கைப் படிமுறைகள் யாவை?
2. வண்ணத்துப்பூச்சியின் குடம்பியை மனிதர்கள் எவ்வாறு அழைப்பர்?
3. மனிதர்கள் குடம்பிப் பருவத்தை வெறுப்பதற்கான காரணம் யாது?
4. ''ஒருவரின் துன்பத்தில் மற்றவர் இன்பம் காணுகிறார்'' என்பதை வண்ணத்துப்பூச்சி எச்சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டுகிறது?
5. இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்துகொள்ளும் படிப்பினை யாது?

## 10.2 பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுவோம்.

i. மாலை + நேரம் - ____________________

ii. பூ + செடி - ____________________

iii. முட்டை + ஒன்றிலிருந்து - ____________________

iv. எம் + இனத்தவர்கள் - ____________________

v. இடம் + பற்றாக்குறை - ____________________

**10.3 மின்னஞ்சல் மூலம் பரிமாறப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை 1, 2, 3, 4, 5, 6 என வரிசைப்படுத்தி எழுதுவோம்.**

- ◯ அப்பா எங்கே இருக்கிறீர்கள்?
- ◯ எப்போது வீட்டிற்கு வருவீர்கள்?
- ◯ நான் இப்போது நிறுவனத்தில் இருக்கிறேன்.
- ◯ கட்டாயம் வாங்கி வருகிறேன்.
- ◯ நாளை வீட்டிற்கு வருவேன்.
- ◯ வீட்டிற்கு வரும்போது எனக்குக் கதைப்புத்தகம் வாங்கி வாருங்கள்.

**10.4 தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் எழுதுவோம்.**

**உதாரணம் :-** சரணாலயத்திற்கு / நாங்கள் / பறவைகள் / சென்றோம்

நாங்கள் பறவைகள் சரணாலயத்திற்குச் சென்றோம்.

i. வீரர்களின் / மைதானத்தில் / இடம்பெற்றது / அணிவகுப்பு

______________________________

ii. நாயைக் / பூனை / கண்ட / துள்ளிக் / ஓடியது / குதித்து

______________________________

iii. அப்பாவுடன் / சென்றேன் / நான் / கடைக்குச் / இன்று

______________________________

iv. பலவர்ணப் / வாழ்ந்தன/மரங்களில் / உயர்ந்த / பறவைகள்

______________________________

v. நல்ல/நித்திரை /பழக்கம்/ஆகும்/விட்டெழுவது/அதிகாலையில்

______________________________

# 11 மூதுரை

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு.**

**விளக்கம்**

ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அரசனை விட, கசடறக் கற்றவனே மேலானவன். ஏனென்றால், அரசனுக்கு அவன் தேசத்தைத் தவிர வேறெங்கும் சிறப்பு இல்லை. ஆனால், கற்றவனுக்கோ அவன் செல்லும் இடமெல்லாம் சிறப்பு உண்டு.

**அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.**

**விளக்கம்**

குளத்தில் நீர் வற்றிய உடன் விலகிச் செல்லும் பறவைகள்போல, நமக்குத் துன்பம் வந்தபோது நம்மை விட்டு விலகிச் செல்பவர்கள் உறவினர் அல்லர். அந்தக் குளத்திலேயே எப்போதும் சேர்ந்து வாழும் கொட்டி, அல்லி, நெய்தல் போன்ற கொடிகளைப்போல, நம்முடனேயே நம் துன்பங்களையும் பகிர்ந்து கொள்பவர்களே நம் உறவினர்கள் எனக் கூறத்தக்கவர்கள் ஆவர்.

**கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி**
**தானும் அதுவாகப் பாவித்துத் - தானுந்தன்**
**பொல்லாச் சிறகைவிரித்(து) ஆடினால் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி.**

**விளக்கம்**

காட்டில் மயில் ஆடுவதைப் பார்த்த வான்கோழி உடனே தன்னையும் அதைப்போலவே நினைத்துத் தன்னுடைய அழகில்லாத சிறகை விரித்து ஆடுவதைப் போன்றதே, கல்வி கற்காதவன் சொல்லும் கவிதை ஆகும். அதனால் ஒரு பயனும் இல்லை.

**சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம்அவரை**
**ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்**
**குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து**
**மறைக்குமாம் கண்டீர் மரம்.**

**விளக்கம்**

தன்னை வெட்டுபவனுக்கும் நிழலைத் தந்து காக்கும் மரத்தைப்போல, அறிவுடையார் அவர்தம் உயிருக்கே தீங்கு செய்பவனையும் இயன்றவரைப் பாதுகாக்கவே செய்வர்.

**அட்டாலும் பால் சுவையில் குன்றா(து) அளவளவாய்**
**நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்.**

**விளக்கம்**

நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். தமது நிலை தாழ்ந்தாலும் நற்பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவர். அவர்களது நட்பு எவ்வளவு காய்ச்சினாலும் சுவைகுன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டுச் சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப் போன்றது.



**பயிற்சி**

## 11.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. செல்லும் இடமெல்லாம் சிறப்புப் பெறுபவர் யார்?
2. கல்வி கற்காதவனை எதற்கு ஒப்பிடுகிறார்?
3. நம் உறவினர் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்?
4. அறிவுடையவரின் சிறப்புப் பண்பு யாது?
5. நற்பண்புள்ளோரின் நட்பு எத்தகையது ?

**11.2 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பாடத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.**

| | | | |
|---|---|---|---|
| i. அரசன் | - ______ | ii. நாடு | - ______ |
| iii. பாடல் | - ______ | iv. புள் | - ______ |
| v. தடாகம் | - ______ | vi. கவலை | - ______ |
| vii. விருட்சம் | - ______ | viii. ஆவி | - ______ |
| ix. சிநேகிதன் | - ______ | x. மனிதர் | - ______ |

**11.3 தரப்பட்ட சொற்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு எழுத்தை மட்டும் தெரிவுசெய்து நான்கு எழுத்துக்களைக் கொண்ட சொல்லைக் கோட்டில் எழுதுவோம்.**

உதாரணம் :- கவலை, கவிதை, ஞமலி, மன்னன் <u>கவிஞன்</u>

i. வனப்பு, கரம், லாடம், கறுப்பு ______


ii. தாரம், கனி, யன்னல், அரம் ______

iii. விந்தை, வையகம், மதிப்பு, அரும்பு ______

iv. முருங்கை, பயணம், ஆற்றல், சிகரம் ______

v. சிரட்டை, தங்கை, கடல், பணம் ______

**11.4 கீழே தரப்பட்டவற்றுள் பொருத்தமான எழுவாயைத் தெரிந்தெடுந்து இடைவெளியில் எழுதுவோம்.**



நீ கிளி சிற்பி நான் மாணவி



i. ______ சிலையைச் செதுக்கினான்.


ii. ______ யாருடன் சென்றாய்?

iii. ______ பாடசாலைக்குச் சென்றேன்.

iv. ______ பழத்தைக் கொத்தியது.

v. ______ வகுப்பில் முதல் நிலையைப் பெற்றாள்.

# 12 கொடைக்குணமும் பரிவுணர்வும்



(''கர்ண மகாராசாவின் கொடைத்திறனைப் பற்றிப் பல வாய்மொழிப் புராணக் கதைகள் உள்ளன. அத்தகைய கதைகளில் ஒன்றை இப்போது உங்களுக்குக் கூறப்போகிறேன்'' என்று, தாத்தா கதையைக் கூறத் தொடங்கினார். கதை கேட்க ஆயத்தமான குழந்தைகள் தாத்தாவைச் சுற்றி ஆர்வத்துடன் அமர்ந்திருந்தனர்.)

பிள்ளைகளே! கர்ண மகாராசா ''அங்கதேசத்தை'' ஆளும் ஒரு சிற்றரசர். அவரின் புகழ் எங்கும் பரவிக்கொண்டிருந்தது. துரியோதன சக்கரவர்த்தியே கர்ணனுக்கு அங்கதேசத்தை நன்கொடையாகக் கொடுத்திருந்தார்.

ஒருநாள் அமைச்சர் ஒருவர் துரியோதனனிடம் உரையாடிக் கொண்டிருக்கும்போது, ''மகா பிரபுவே! நீங்கள்தான் இந்த நாட்டின் சக்கரவர்த்தி! தங்களிடம் அனைத்து அதிகாரங்களும் செல்வங்களும் உள்ளன. ஆனால், உங்களுக்கில்லாத புகழ் கர்ணனுக்கு இருக்கின்றதே. அது எப்படி நியாயமாகும்?'' என்று மன்னனைப் பார்த்துக் குதர்க்கமாக வினவினார்.

அமைச்சரின் கூற்று துரியோதனனைச் சிந்திக்கத் தூண்டியது. எனவே துரியோதனன் அமைச்சரிடம், ''நானும் கர்ணனைப்போல் புகழ்பெற யோசனை ஒன்று கூறுங்கள்'' என்று கேட்டார். ''மகா பிரபுவே! நாளை முதல் தாங்களும் கர்ணனைப்போல் கேட்பவர்க்கு இல்லை என்று கூறாது கொடுக்கத் தொடங்கிவிடுங்கள். உங்களுக்குக் 'கொடைவள்ளல்' என்ற புகழ் கிடைத்துவிடும்'' என்று ஆலோசனை கூறினார் அமைச்சர்.

துரியோதனன், ''சரி, அப்படியே நடக்கட்டும்'' என்றார். மறுநாள் 'துரியோதனச் சக்கரவர்த்தி கொடை வழங்குவார்' என்று அமைச்சர் அறிவித்தார். அந்த அறிவிப்பைக் கேள்விப்பட்ட கண்ணன் முதியவர் போல் தன் உருவத்தை மாற்றிக்கொண்டு துரியோதனனிடம் வந்து ''ஐயா, எனக்கு ஒரு பொருள் தானமாக வேண்டும்'' என்று கேட்டார். ''பெரியவரே! உமக்கு என்ன பொருள் வேண்டும்? கேளும்! தருகிறேன்'' என்றார் துரியோதனன். அதற்கு அந்தப் பெரியவர் ''இன்னும் ஒரு மாதத்தின் பின் நான் விரும்பும் பொருளைக் கேட்டுப் பெற்றுக்கொள்கின்றேன் அப்போது தாருங்கள்'' என்றார். ''அப்படியே செய்கிறேன்'' என்று வாக்குக் கொடுத்தார் துரியோதனன்.

வாக்குறுதியைப் பெற்றுச் சென்ற கண்ணன், அன்று மாலையே மழைக் கடவுளை அழைத்து ''நாளை முதல் ஒரு மாதத்திற்கு அடைமழை பெய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். அன்றுமுதல் ஒரு மாதமாகத் துரியோதனனின் நாடெங்கும்

அடைமழை பெய்தது. கண்ணன் ஒரு மாதத்தின் பின் முதியவர்போல் வேடமிட்டு துரியோதனனைக் காண்பதற்காக வந்தார். துரியோதனன் அந்த முதியவரைப் பார்த்து, ''மழையில் நனைந்தவாறு வந்திருக்கும் நீங்கள் யார்?'' என்று கேட்டார்.

துரியோதனன், ஒரு மாதத்திற்கு முன்னர் கொடுத்த வாக்கை, அம்முதியவர் நினைவூட்டினார். ''அதற்கென்ன இப்போது? என்ன வேண்டுமோ கேட்டுப் பெற்றுக்கொண்டு செல்லுங்கள்'' என்று அலட்சியமாகப் பதிலளித்தார் துரியோதனன்.

முதியவர், ''மகாபிரபுவே! என் மகளின் திருமண நிகழ்விற்கு அடுப்பெரிக்க ஒரு வண்டி காய்ந்த விறகுகள் வேண்டும்'' என்றார்.

துரியோதனன் சினத்துடன் முதியவரைப் பார்த்து ''உமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா! நாங்கள் அரண்மனைப் பயன்பாட்டிற்கே விறகுகள் இல்லாமல் அல்லற்படுகின்றோம். இந்த நேரத்தில் நீர் காய்ந்த விறகுகள் கேட்கிறீரே! பொன், பொருள் என்றால் தருகின்றேன் விறகு தருவதற்கு என்னால் முடியாது'' என்று கூறி அவ்விடத்தைவிட்டு முதியவரை வெளியேற்றினார்.

முதியவர் அங்கிருந்து புறப்பட்டு நேரே கர்ண மகாராசாவின் அரண்மனைக்குச் சென்றார்.

முதியவர் ஒருவர் தனக்கு முன்னால் மழையில் நனைந்து கொண்டு நிற்பதைப் பார்த்த கர்ண மகாராசா, முதலில் முதியவர் உடுத்திக் கொள்ள மாற்று உடையும் தலையைத் துவட்டிக்கொள்ளத் துண்டும் கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

முதியவரும் அதன்படியே உலர்ந்த ஆடைகளை உடுத்திக் கொண்டார். அவருக்குப் பருகுவதற்குச் சூடான பாலும் வழங்கப்பட்டது. களைப்பு நீங்கிய பெரியவர், ஐயா கர்ண மகாராசாவே! என் மகளின் திருமணம் நாளை நடைபெற உள்ளது.

சமையல் செய்ய ஒரு வண்டி நிறையக் காய்ந்த விறகுகள் வேண்டும்'' என்றார்.

கர்ண மகாராசா, தன் அரண்மனைப் பணியாளர்களை அழைத்து, ''நம் நாட்டுக் காட்டில் பாழடைந்த அரண்மனை ஒன்று உள்ளது. அந்த அரண்மனையில் மரத்தாலான தூண்களும் உத்திரங்களும் நிறைய உள்ளன. அவை மழையில் நனையாமல் காய்ந்த நிலையில் இருக்கும். நீங்கள் ஒரு வண்டி நிறைய அவற்றை ஏற்றி, அவை நனையாதபடி வண்டியில் கூரை வேய்ந்து பெரியவரின் ஊருக்கு அனுப்பி வையுங்கள்'' என்று ஆணையிட்டார்.

கர்ண மகாராசா சொன்னபடியே பணியாளர்கள் தூண்களையும் உத்திரங்களையும் பெயர்த்து எடுத்தனர். ஒரு வண்டியில் அவற்றை ஏற்றி, அவை நனையாமல் இருப்பதற்குப் பனை ஓலையால் கூரையும் வேய்ந்தனர். பின்னர், அவ்வண்டியைத் துரியோதனின் அரண்மனை இருக்கும் தெருவழியே ஓட்டிச் சென்றனர்.

இதனைக் கண்ட அமைச்சர் முதியவரிடம், ''பெரியவரே, காய்ந்த விறகு கிடைத்துவிட்டது போலிருக்கிறதே'' என்று கேட்டார். ''ஆமாம்! கர்ண மகாராசாதான் கொடுத்தார்'' என்றார் முதியவர்.

அமைச்சருக்கு இப்போதுதான், கொடை வழங்குவதற்குச் செல்வம் மட்டும் இருந்தால் போதாது; கொடைக்குணமும் பரிவுணர்வும் வேண்டும் என்னும் உண்மை புரிந்தது. அந்த உண்மையைத் துரியோதன சக்கரவர்த்திக்கு விளக்குவதற்காக அமைச்சர் விரைந்து சென்றார்.

- கழனியூரன், ''தாத்தா பாட்டி சொன்ன கதைகள்''



பயிற்சி

## 12.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. அங்கதேசத்து அரசன் யார்?
2. அங்கதேசத்தை நன்கொடையாக கொடுத்தவர் யார்?
3. கொடை வள்ளலுக்கேரிய சிறப்புப் பண்புகள் யாவை?
4. கர்ண மகாராசாவின் அரண்மனைக்குச் சென்ற முதியவருக்கு மன்னன் முதலில் வழங்கிய உபசரிப்பின் மூலம் நாம் அறிந்து கொள்ளும் பண்பாட்டுச் சிறப்பு யாது?
5. கொடைவழங்குவதில் துரியோதனச்சக்கரவர்த்திக்கும் கர்ணமகாராசா விற்குமிடையே நீர் காணும் வேறுபாடு யாது?

## 12.2 கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச் சொல்லைப் பாடத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.

i. அரசன் வாழுமிடம் __________

ii. இல்லையென்று கூறாது கொடுப்பவன் __________

iii. அரசர்களுக்கெல்லாம் அரசன் __________

iv. பணிக்கு அமர்த்தப்பட்டவர் __________

v. ஒருவர் தன் உருவத்தை மாற்றிக்கொள்வது __________

## 12.3 பின்வரும் சொற்களில் ஓர் எழுத்தைச் சேர்த்து அல்லது ஓர் எழுத்தை நீக்கிப் புதிய சொற்களை உருவாக்குவோம்.

i. கணினி - ஓர் எழுத்தை நீக்கினால் சுவைக்கலாம். [ ]

ii. வெற்றிலை - ஓர் எழுத்தை நீக்கினால் பரிசு பெறலாம். [ ]

iii. கடல் - ஓர் எழுத்தை நீக்கினால் வீடு கட்ட உதவும். [ ]

iv. கதை - ஓர் எழுத்தைச் சேர்த்தால் பொதி சுமக்கும். [ ]

v. மானம் - ஓர் எழுத்தைச் சேர்த்தால் பறக்கலாம். [ ]

## 12.4 கீழ்வரும் சொற்களைக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்வோம்.

அவன் அவர்கள் ரவிக்குமார் மாணவர்கள்
வந்தான் உண்டார்கள் வந்தது ஓடின
அரசி தாவியது ஓடியது பாடகி
வந்தன தாவின வந்தாள்



| உயர்திணை | | | அஃறிணை | |
|---|---|---|---|---|
| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
| | | | | |
| | | | | |
| | | | | |

## 12.5 கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய சொற்களை எழுதுவோம்.

| | | | |
|---|---|---|---|
| i. | பசு தருவது | பா | பால் |
| ii. | வாய்க்குள் இருப்பது | | |
| iii. | புத்தகத்தின் ஒத்தகருத்துச் சொல் | | |
| iv. | கட்டடம் கட்ட உதவுவது | | |
| v. | எழுத்துகள் பல சேர்ந்தால் | | |
| vi. | நடக்க உதவுவது | | |
| vii. | ஒருவகைத் தானியம் | | |

ல்

## 12.6 பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுவோம்.

i. மா பலா வாழை என்பன முக்கனிகள்

ii. கவிதா கடைக்குச் சென்றாளா

iii. ஆகா எவ்வளவு பெரிய நீர் வீழ்ச்சி

iv. மாதவா நீ பாடசாலைக்குச் சென்றாயா

v. நாளாந்தம் உடற்பயிற்சி செய்துவந்தால் உடல் ஆரோக்கியம் பெறலாம்

**விகடத் துணுக்கு**

**கோபால்** : ‘‘ நான் சொல்வதெல்லாம் நடக்கும்!’’

**கண்ணன்** : ‘‘எங்கே சொல்லு?’’

**கோபால்** : ‘‘ ஆடு, மாடு, யானை…!’’



# 13 மெய்ப்பொருள் கல்வி



தலைசீவிப் பள்ளிக்கே ஓடு - நல்
தங்கப் பதுமையாம் தோழர்களோடு!
விலையில்லா மெய்ப்பொருள் கல்வி! - அதை
விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி!

அழுக்கில்லா ஆடையே மேன்மை! அதை
அணிவதாலல்லவோ உடற்குண்டாம் தூய்மை
ஒழுங்கோடு நூல்களைத் தூக்கி - நில்லாது
ஓடடி ஓடடி பள்ளியை நோக்கி!

சின்னஞ் சிறு குயில்போல - இசை
சிந்திச் சிரித்துச் செவ்விதழ் காட்டு
பொன்னொத்த தோழர்களோடு - பள்ளி
போகும் வழியிலும் ஒற்றுமை காட்டு!





இலவசப் பாடநூல்

கற்பிப்போர் கண்கொடுப்போரே! - அந்தக்
கணக்காயர் உரையினில் இருசெவி சேரே!
நற்பெயர் எடுத்திட வேண்டும்! - நாளும்
நன்றாகப் படித்து நீ முன்னேற வேண்டும்!

- *வாணிதாசன்*



**அரும்பதம்**

| | | |
|---|---|---|
| பதுமை | - | உருவம் |
| மெய்ப்பொருள் | - | நிலையான பொருள் |
| கணக்காயர் | - | ஆசிரியர் |
| மேன்மை | - | உயர்வு |
| நாளும் | - | தினமும் |





**பயிற்சி**

## 13.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. விலை மதிப்பற்ற பொருள் எது?
2. கல்வியின் மூலம் எதைப் பெறலாம் எனப் பாடலாசிரியர் குறிப்பிடுகின்றார்.
3. "கல்வி கற்பிப்போர் கண்கொடுப்போரே" என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?
4. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

   i. பதுமை     ii. கல்வி     iii. ஒற்றுமை
5. பள்ளிக்குச் செல்லும் ஒழுங்கு பற்றிய பாடலில் குறிப்பிடப்படும் நற்பண்புகள் யாவை?

**13.2 பாடலிலிருந்து விடைகளைத் தெரிந்தெடுத்து இடைவெளிகளை நிரப்புவோம்.**

i. அஃறிணைப் படர்க்கை ஒருமைச் சொல் - ____________

ii. உயர்திணைப் படர்க்கை ஒருமைச் சொல் - ____________

iii. உயர்திணை முன்னிலை ஒருமைச் சொல் - ____________

iv. அஃறிணைப் படர்க்கை பன்மைச் சொல் - ____________

**13.3 சுருக்கக் குறியீடுகளின் விரிவினை எழுதுவோம்.**

i. மு.ப. - ____________________

ii. பி.கு. - ____________________

iii. இ.போ.ச. - ____________________

iv. ம.ப.பா. - ____________________

v. கி.பி. - ____________________



**13.4 பொருத்தமான செயப்படுபொருளைத் தெரிந்தெடுத்து இடைவெளியில் எழுதுவோம்.**



தீர்ப்பு விமானத்தைச் பானையை
திருக்குறளை பாடம்



i. கண்ணன் தமிழ்ப் ____________________ படித்தான்.

ii. திருவள்ளுவர் இரண்டு அடிகளில் __________ இயற்றினார்.

iii. நீதிபதி வழக்கில் ____________________ வழங்கினார்.

iv. விமானி ஆகாயத்தில் ____________________ செலுத்தினான்.

v. குயவன் களிமண்ணைப் பயன்படுத்தி __________ வனைந்தான்.

# 14 பண்டிகைகள்



அன்று தைப்பொங்கல் திருநாள். கவிதாவின் வீட்டிற்கு அவளின் நண்பர்களான அன்வரும் மேரியும் தமது பெற்றோருடன் வந்திருந்தனர். தோழர்களைக் கண்ட கவிதா வீட்டு வாசல்வரை ஓடிவந்து அவர்களை அன்புடன் வரவேற்றாள்.

**கவிதா** : வணக்கம், வாருங்கள்! வாருங்கள்!
(அன்வரும் மேரியும் பொங்கல் வாழ்த்துக்களைக் கூறி அன்பையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர்.)

**மேரி** : கவிதா! இன்று நீ பாவாடை சட்டை அணிந்து தலையில் பூக்கள் சூடி அழகாக இருக்கிறாய்.

**கவிதா** : அப்படியா! நன்றி, உள்ளே வாருங்கள். பொங்கல் உண்போம். (கவிதாவின் அம்மா பொங்கல் மற்றும் பலகாரங்களைப் பரிமாறினார்.)

**மேரி** : நன்றி கவிதா, பொங்கல் மிகவும் சுவையாக உள்ளது. கவிதா, இப்பண்டிகையை ஏன் கொண்டாடுகிறீர்கள்?

**கவிதா** : சூரியனுக்கும் உழவுத் தொழிலுக்கும் நன்றி செலுத்தும் முகமாக இப்பண்டிகையைக் கொண்டாடுகிறோம்.

**அன்வர்** : இப்பண்டிகை பற்றிச் சற்று விளக்கமாகக் கூறுவாயா?

**கவிதா** : தைப்பொங்கலன்று வீட்டைச் சுத்தப்படுத்தி வாசலில் கோலம் போடுவோம். மாவிலை, தோரணம், மலர்மாலை என்பவற்றால் வீட்டை அலங்கரிப்போம். வீட்டிலுள்ள அனைவரும் குளித்துப் புத்தாடை அணிவோம்.

**மேரி** : அதன் பிறகு என்ன செய்வீர்கள்?

**கவிதா** : அம்மா, புதுப்பானையில் பாலை இட்டுப் பொங்க வைப்பார். அப்பா பயறு கலந்த அரிசியைப் பொங்கல் பானையில் போடுவார். சிறிது நேரத்தின்பின்னர் அதில் சர்க்கரை இடுவர். பொங்கல் பொங்கியதும் பழம், பாக்கு, வெற்றிலை, கரும்பு, இளநீர், என்பவற்றுடன் பொங்கலைச் சூரியனுக்குப் படைத்து வணங்குவோம். அதன் பின்னர் நாங்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்வோம். எல்லோரும் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவோம். பொங்கலுடன் வடை, முறுக்கு, லட்டுப் போன்ற சிற்றுண்டிகளையும் அயலில் உள்ளவர்களுக்குக் கொடுத்து நாமும் உண்டு மகிழ்வோம்.

**அன்வர்** : மேரி, நீங்கள் நத்தார்ப் பண்டிகையை எதற்காகக் கொண்டாடுகிறீர்கள்? இதனைச் சற்று விளக்கமாகக் கூறுவீரா?

**மேரி** : நிச்சயமாக, இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் பண்டிகையே நத்தார் பண்டிகை யாகும். ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் இருபத்தைந்தாம் திகதி இதனைக் கொண்டாடுவோம். இப்பண்டிகையின்போது விசேடமாக, நத்தார் மரங்களை மின்விளக்குகளால் அலங்கரிப்போம்.

**கவிதா** : ஆமாம், அம்மரங்கள் பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் காட்சியளிக்கும். இரவு வேளைகளில் இம்மரங்கள் உலகையே ஒளிமயமாக்கும்.

**மேரி** : உண்மைதான். இப்பண்டிகையின்போது நத்தார்த் தாத்தா வந்து பரிசுகள் வழங்கி எம்மைப் போன்ற சிறுவர்களை மகிழ்விப்பார். அன்றைய தினம் புத்தாடை அணிந்து நாம் தேவாலயத்திற்குச் சென்று வழிபடுவோம். உற்றார் உறவினர்களுக்கு நத்தார்க் கேக், பாற்சோறு மற்றும் இனிப்புப் பண்டங்கள் கொடுத்து மகிழ்வோம்.

**கவிதா** : நன்றாகச் சொன்னாய் மேரி. இஸ்லாமியரின் பண்டிகைகள் பற்றிக் கூறுவாயா அன்வர்?

**அன்வர்** : நாங்கள் ஒவ்வொரு வருடமும் நோன்புப் பெருநாள் மற்றும் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடு கின்றோம். ரமழான் மாதத்தில் நோன்பு நோற்று நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகிறோம்.

**கவிதா** : நோன்பு காலத்தில் உண்ணாமலும் பருகாமலும் இருப்பதால் என்ன நன்மைகள் கிடைக்கும் அன்வர்?

**அன்வர்** : நோன்பு நோற்பதால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. அதிகாலையில் எழும்புதல்; உரிய நேரத்திற்குக் கடமைகளைச் செய்தல்; ஏழைகளின் பசியை உணர்தல்; தானதர்மம் செய்தல்; கோபம், அகங்காரம் என்பனவற்றைச் சகித்துக்கொள்ளல் போன்றன அவற்றில் சிலவாகும்.

**கவிதா** : ஹஜ்ஜுப் பெருநாள் ஏன் கொண்டாடப்படுகின்றது?

**அன்வர்** : இஸ்லாமிய வருடத்தில் ஹஜ் மாதம் கடைசி மாதம் ஆகும். இம்மாதத்தில் உலகிலுள்ள இஸ்லாமியர்கள் மக்கா நகரில் ஒன்றுகூடி ஹஜ் கிரியைகளை மேற்கொள்வர். அப்போது, உலகிலுள்ள ஏனைய இஸ்லாமியர்கள் அனைவரும் ஹஜ்ஜுப் பெருநாளைத் தமது வீடுகளில் கொண்டாடுவார்கள்.

**மேரி** : அன்வர், பெருநாள் தினம் என்ன செய்வீர்கள்?

**அன்வர்** : பெருநாள் தினத்தன்று. புத்தாடை அணிவோம். பள்ளிவாசலுக்குச் சென்று இறைவழிபாட்டில் ஈடுபடுவோம். அன்றைய பிரதான உணவாகப் பிரியாணியைத் தயார் செய்வோம். உற்றார் உறவினருக்கு வட்டிலப்பம், தொதல், மஸ்கற் போன்ற இனிப்புப் பண்டங்களைப் பரிமாறிக் களிப்புறுவோம்.

**கவிதா** : எல்லா சமயத்தவர்களது பண்டிகைகளும் அன்பை வெளிப்படுத்தல், தர்மம் செய்தல், நன்றி செலுத்துதல், ஒற்றுமையை மேம்படுத்தல் போன்ற விழுமியங்களை போதிக்கின்றன அல்லவா?

**மேரி** : சரியாகச் சொன்னீர் கவிதா. எனவே, நாம் அனைவரதும் பண்டிகைகளையும் ஒற்றுமையாகக் கொண்டாடி மகிழ்வோம்.

(மேரியும் அன்வரும் பெற்றோர்களுடன் விடை பெற்றுச் செல்கின்றனர்.)

பயிற்சி

## 14.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. இலங்கையில் கொண்டாடப்படும் பண்டிகைகள் மூன்றைக் குறிப்பிடுக.
2. தைப்பொங்கல் எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
3. நத்தார்ப் பண்டிகை எம்மாதத்தில் எந்தத்திகதியில் கொண்டாடப்படும்?
4. நோன்பு நோற்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் மூன்றைக் குறிப்பிடுக.
5. பண்டிகைகள் மூலம் நாம் வளர்த்துக்கொள்ளும் விழுமியங்கள் எவை?

## 14.2 பொருத்தமான இணைமொழியைத் தெரிவுசெய்து உரிய கோட்டில் எழுதுவோம்.

காடுமேடு ஆடிப்பாடி நோய்நொடி
கட்டித்தழுவி அல்லும்பகலும்

i. குமார் தனது தொலைந்த பையைத் தேடி ______________ எல்லாம் அலைந்து திரிந்தான்.

ii. நாம் ______________ இன்றி வாழ வேண்டும்.

iii. சிறுவர்கள், சிறுவர் தினத்தன்று ______________ குதூகலமாக இருந்தனர்.

iv. விளையாட்டுப் போட்டியில் பரிசுபெற்ற மகனைத் தாய் ______________ முத்தமிட்டார்.

v. விவசாயிகள் ______________ அயராது உழைக்கின்றனர்.

**14.3 கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை இனங்கண்டு எழுதுவோம்.**

i. தங்கை பந்து அடித்தாள்.

| | |
|---|---|
| எழுவாய் | - ________ |
| பயனிலை | - ________ |
| செயப்படுபொருள் | - ________ |

ii. சிறுமி வாழைப்பழம் சாப்பிட்டாள்.

| | |
|---|---|
| எழுவாய் | - ________ |
| பயனிலை | - ________ |
| செயப்படுபொருள் | - ________ |

iii. நான் பலாக் கன்றை நாட்டினேன்.

| | |
|---|---|
| எழுவாய் | - ________ |
| பயனிலை | - ________ |
| செயப்படுபொருள் | - ________ |


iv. குமரன் அழகிய வீட்டைக் கட்டினான்.

| | |
|---|---|
| எழுவாய் | - ________ |
| பயனிலை | - ________ |
| செயப்படுபொருள் | - ________ |

v. உழவன் வயலுக்குச் சென்று நெல் விதைத்தான்.

| | |
|---|---|
| எழுவாய் | - ________ |
| பயனிலை | - ________ |
| செயப்படுபொருள் | - ________ |

# 15 இருளை ஒளியால் நிரப்பியவர்



ஒருநாள் பாடசாலையிலிருந்து ஒரு சிறுவன் வீடு திரும்பினான். அவன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து தனது அன்புத் தாயிடம் கொடுத்தான். ''அம்மா! எனது ஆசிரியர், இக்கடிதத்தை உங்களிடம் கொடுக்கும்படியும் நீங்கள் மாத்திரமே படிக்கவேண்டும் என்றும் கூறினார்'' என அச்சிறுவன் கூறினான்.

தாயார் தனது அன்பு மகன் கொடுத்த கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் படிக்கத் தொடங்கினார். அந்தத் தாயின் கண்கள் கலங்கத் தொடங்கின. தாயை அவதானித்த சிறுவன், ''அதில் என்ன எழுதியிருக்கின்றது?'' என்று தயக்கத்துடன் வினவினான். தன்னைச் சுதாகரித்துக் கொண்ட தாய் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததை ''உங்கள் மகன் மிகவும் புத்திசாலி. அவனது அறிவுக்கு ஏற்றவகையில் இந்தப் பாடசாலை இல்லை. அதனால் அவனை வீட்டில் வைத்து நீங்களே கற்றுக்கொடுங்கள்'' என உரத்து வாசித் துக்காட்டினார். அதைக்கேட்ட சிறுவன் மகிழ்ச்சியில் உற்சாகமாகச் சத்தமிட்டான்.

அச்சிறுவனுக்குப் பாடசாலையில் கல்வியைத் தொடர வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றபோதிலும், அந்தச் சிறுவன் எழுத்து, வாசிப்பு, கணிதம் போன்றவற்றைத் தனது தாயிடம் கற்று வந்தான். அவனது அன்புத் தாய் எப்போதும், ''உன்னால் முடியும்'' என்று கூறுவார். தன் தாய் தன்னுள் ஏற்படுத்திய அந்தத் தன்னம்பிக்கையை கடைசிவரை அவனால் மறக்க முடியவில்லை.

அவனது தாய் அவனை உருவாக்கினார். அவனை மிகவும் உறுதியாக நம்பினார். அவனை, யாருக்காகவாவது வாழ வேண்டும் என்று உணர்த்தினார். யாரையும் ஏமாற்றக்கூடாது என்பதையும் கற்பித்தார். அவன் வாசிப்பிலும் சுயகற்றலிலும் எப்போதும் மிக ஆர்வமுடையவனாக இருந்தான். விஞ்ஞான ஆய்வு நூல்களை அதிகம் வாசித்தான். அதிலுள்ள பரிசோதனைகளைச் செய்துபார்ப்பதை வழக்கமாக்கிக் கொண்டான்.

ஆண்டுகள் பல வேகமாகக் கடந்தோடின. சிறுவன் வளர்ந்து பெரியவனானார். அவரின் தாயாரும் இறந்து விட்டார். அவர் பிற்காலத்தில் புதிய புதிய கண்டுபிடிப்புகளைச் செய்து, உலகம் போற்றும் வகையில் இந்த நூற்றாண்டின் மகத்தான விஞ்ஞானியானார். அவருக்குப் பாராட்டுக்கள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன.

ஒருநாள் அவர் வீட்டில் ஏதோவொன்றைத் தேடிக்கொண்டிருந்தார். அப்போது சிறுவயதில் தனது அம்மாவுக்கு ஆசிரியர் அனுப்பிவைத்த கடிதம் கண்ணில்பட்டது. அக்கடிதம் தனது தாயாரால் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். தன்னைப் பற்றி உயர்வாக எழுதியிருந்த அக்கடிதத்தை மீண்டும் படிக்க ஆசைப்பட்டுப் படித்தார். ஆனால், அக்கடிதத்தில் இருந்த வரிகள் அவரது அம்மா அன்று வாசித்துக்காட்டியவை அல்ல. மாறாக, ''உங்கள் மகன் புத்திக் குறைபாடுடையவன். அவனைத் தொடர்ந்தும் எமது பாடசாலையில் வைத்துக்கொள்ள முடியாது. அவனை எமது பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்'' என்று எழுதப்பட்டிருந்தது.

இக்கடிதத்தைப் படித்ததும் மகத்தான அந்த விஞ்ஞானி அதிர்ந்து போய்விட்டார். இந்த விடயம் எனக்குச் சிறுவயதில் தெரிந்திருந்தால் எந்தளவிற்கு மனதளவில் முடங்கிப்போய் இருப்பேன் என்பதை நினைத்து அதிர்ச்சியடைந்தார். அவர் அந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு வெகுநேரம் எடுத்தது. பின்னர் ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டார். தன் உழைப்பையும் முயற்சியையும் பாராட்டி ஊக்கமளித்த தனது அம்மாவை நன்றியோடு நினைத்துக்கொண்டார்.

மின்குமிழைக் கண்டுபிடித்து, இரவை ஒளியால் நிரப்பிய அந்த அற்புத மனிதர் அக்கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''புத்திக்குறைபாடுடைய தோமஸ் அல்வா எடிசன் தன்னுடைய தாயாரின் தன்னம்பிக்கையினால் இந்த நூற்றாண்டின் மகத்தான விஞ்ஞானியானான்.''



**பயிற்சி**

## 15.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. இருளை ஒளியால் நிரப்பிய அந்த அற்புத மனிதர் யார்?
2. அவர் சிறுவயதுமுதல் ஆர்வம் காட்டிய விடயங்கள் எவை?
3. அவரது கண்டுபிடிப்புக்களில் ஒன்றைக் குறிப்பிடுக.
4. அவரது தாயார் அவரிடம் எதிர்பார்த்த நற்பண்புகளைக் குறிப்பிடுக.
5. இக்கதையின் மூலம் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய படிப்பினை என்ன?

**15.2 பின்வரும் சொற்களின் திருத்தமான வடிவத்தைப் பாடத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.**

i. கூரினார் - ______ ii. உறத்து - ______

iii. புத்திசாளி - ______ iv. அரிவு - ______

v. மகிள்ச்சி - ______ vi. கள்வி - ______

vii. தண்ணம்பிக்கை - ______ viii. உருதி - ______

ix. விஞ்சான ஆய்வு - ______ x. விஞ்சாணி - ______

**15.3 பொருத்தமான இரட்டைக்கிளவியைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுவோம்.**

i. அம்மா தயாரித்த முறுக்கை நான் ______ எனக் கடித்து உண்டேன். (வழவழ / மொறுமொறு / சடசட)

ii. மாலைவேளை மழை பெய்தபோது ______ என மின்னல் மின்னியது. (பளீர்பளீர் / பொலபொல / கடகட)

iii. காவல் அதிகாரியிடம் பிடிபட்ட திருடன் ______ என விழித்தான். (படபட / பரபர / திருதிரு)

iv. மேற்கு வானில் சூரியன் ______ எனப் பிரகாசித்தது. (கடகட / தகதக / சடசட)

v. கண்ணன் ______ என நீரைக் குடித்தான். (சிடுசிடு / மடமட / கிடுகிடு)

### 15.4 பின்வரும் சொற்களைக்கொண்டு கருத்துள்ள வாக்கியங்கள் அமைப்போம்.

i. கரி - ______________________________

கறி - ______________________________

ii. பரி - ______________________________

பறி - ______________________________

iii. பலம் - ______________________________

பழம் - ______________________________

iv. மனம் - ______________________________

மணம் - ______________________________

v. வானம் - ______________________________

வாணம் - ______________________________

**விகடத் துணுக்கு**

***ஆசிரியர்*** : மாடு என்று எழுதச் சொன்னால் நீர் ஏன் ''மோடு'' என்று எழுதினாய்?

***மாணவன்*** : நீங்கள் தானே சொன்னீர்கள், மாட்டுக்கு ''இரட்டைக் கொம்பு'' இருக்கும் என்று...!



**குறிப்பு :-**

- மாணவர்களை லகர, ளகர, ழகர, ரகர, றகர, னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களைக் கொண்ட ஆக்கம் ஒன்றைத் தயாரிக்க வழிப்படுத்துக.
- மேலே கூறியவாறு, இனங்கண்ட சொற்களைக் கொண்டு வாக்கியங்களை அமைக்க வழிப்படுத்துக.

# 16 பென்சிலாக நான் இருப்பேன்



பொதுவாகத் தாத்தா, பாட்டி தமது பேரப்பிள்ளைகளோடு மிகவும் அன்பாக இருப்பார்கள். இவ்வாறே ஒரு பாட்டி தன் பேரனுடன் மிகவும் அன்பாக இருந்தார். ஒருநாள் அந்தப் பாட்டி அழகான பென்சிலால் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். அதைப் பார்த்த பேரன், ''பாட்டி! கதை எழுதிக்கொண்டிருக்கிறீர்களா? அக்கதை என்னைப் பற்றியதா?'' என்று கேட்டான்.


பாட்டி எழுதுவதை நிறுத்தினார். சிரித்துக்கொண்டே பேரனைப் பார்த்தார். ''நான் உன்னைப்பற்றித்தான் எழுதிக்கொண்டிருக் கின்றேன். எழுதப்படும் சொற்களைப்போல், அவற்றை எழுதும் பென்சிலும் மிகவும் முக்கியமானது. நீயும் வளர்ந்த பின்னர் இந்தப் பென்சிலைப்போல் இருப்பாய் என நினைக்கின்றேன்.'' என்றார்.

ஆர்வமும் வியப்புமாகப் பேரன் அந்தப் பென்சிலைப் பார்த்தான். ''பாட்டி! இந்தப் பென்சிலில் சிறப்பாக என்ன இருக்கின்றது? இதுவும் ஏனைய பென்சில்களைப் போன்றுதானே இருக்கின்றது?'' என்றான்.

''உனது பார்வையைப் பொறுத்தே பொருளின் முக்கியத்துவம் இருக்கிறது. பென்சிலுக்கு ஐந்து பண்புகள் உள்ளன. நீயும் அந்த ஐந்து பண்புகளையும் அறிந்துகொண்டு அதன்படி நடந்து, எதிர்காலத்தில் இந்த உலகத்தில் மிகச்சிறந்த ஒருவனாகத் திகழ வேண்டும்.'' என்ற பாட்டி, பென்சிலின் ஐந்து பண்புகள் பற்றிக் கூறலானார்.


## முதலாவது பண்பு

பென்சிலால் தானாக எழுத முடியாது. அதனைப் பிடித்து எழுத ஒரு கை வேண்டும். அதுபோல் நீ பல திறமைகளை உடையவனாக இருப்பினும் உன்னை வழிநடாத்திச் செல்வதற்கு ஒரு கை வேண்டும். அந்தக் கை உனது தந்தையின், தாயின், பாதுகாவலரின், ஆசிரியரின் கையாகக்கூட இருக்கலாம். நல்ல பென்சில், எழுதுபவர் நினைக்கும் வழி செல்கின்றது. அதுபோல வழிநடத்துபவரின் சொற்களைக் கேட்டு நீயும் நடக்க வேண்டும். இது முதலாவது பண்பு.



## இரண்டாவது பண்பு

எழுத எழுதப் பென்சில் கூர்மையற்றதாகிவிடும். அப்போது அதனைக் கூர்மையாக்க வேண்டும். பென்சிலைக் கூர்மையாக்கும்போது அதற்குச் சற்று சிரமமாகவும் துன்பமாகவும் இருக்கும். ஆனால், அது கூர்மையாக்கப்பட்டுச் சிறப்பாகச் செயலாற்றத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்கிறது. அதுபோல



தமிழ் - 4

நீயும் தோல்விகள், துன்பங்களைத் தாங்கக் கற்றுக்கொண்டால் மிகச்சிறந்த ஒருவனாக மாற்றமடைவாய். எந்தவொரு வெற்றியின் பின்னாலும் ஒரு வலியும் வேதனையும் இருக்கும் என்பதை நினைவிற்கொள். இது இரண்டாவது பண்பு.

## மூன்றாவது பண்பு

பென்சிலால் எழுதும்போது தவறாக எழுதியதை அழிறப்பரால் அழித்து விட்டு மீண்டும் சரியாக எழுதுகிறோம். இதற்குப் பென்சில் அனுமதிக்கிறது. தவறைத் திருத்திக் கொள்வது தவறு அல்ல. சரியான பாதையில் செல்லவேண்டுமானால் தவறைத் திருத்திக்கொள்வது மிகவும் அவசியம். அது உனது நல்வாழ்வுக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஏனெனில் விழுவது தோல்வியல்ல. விழுந்துகிடப்பதே தோல்வியாகும். இது மூன்றாவது பண்பு.





## நான்காவது பண்பு



பல்வேறு வர்ணங்கள் பூசப்பட்ட பென்சிலின் வெளித்தோற்றத்தைவிட அதன் உள்ளே இருக்கும் கூர் தான் மிகவும் முக்கியமான பகுதி. அதுபோல உன் வெளிப்புற உருவமோ, நிறமோ, அழகோ முக்கியமல்ல. உன்னுள் இருக்கும் நற்குணம், நற்பண்பு, நல்லொழுக்கம், அறிவு போன்றவைதான் முக்கியமான விடயங்கள். நீயும் இவற்றை விருத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். இது நான்காவது பண்பு.

## ஐந்தாவது பண்பு

ஒரு பென்சிலினால் ஏதாவது ஒன்றை எழுதினால் அது அப்படியே அடையாளமாக இருக்கும். அதுபோலதான் நீ செய்யும் ஒவ்வொரு செயலும் உனது வாழ்நாள் முழுவதும் ஓர் அடையாளமாக இருக்கும். எனவே, உன்னுடைய ஒவ்வொரு செயலையும் மிகவும் அவதானத்துடன் மேற்கொள்ளவேண்டும். இது ஐந்தாவது பண்பு. என்று கூறிமுடித்தார் பாட்டி.

பாட்டி சொன்னவற்றை மிகவும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த பேரன், ''பாட்டி, நான் இப்போது பென்சிலின் பண்புகளைப் புரிந்து கொண்டேன். நானும் இனி பென்சிலைப்போல் வாழத்தான் ஆசைப் படுகின்றேன்'' என்றான்.

பாட்டி சிரித்துக்கொண்டே பேரனின் முதுகில் தட்டிக்கொடுத்தார்.



**பயிற்சி**

### 16.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. வாழ்க்கையில் எம்மை நல்வழிப்படுத்துபவர்கள் யாவர்?
2. ஒரு வெற்றியின் பின்னணியில் இருப்பவை எவை?
3. உன்னுள் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கும் பண்புகள் எவை?
4. தவறை திருத்திக்கொள்வதன் அவசியம் என்ன?
5. பாட்டி குறிப்பிட்ட பென்சிலின் பண்புகள் ஐந்தும் எவை?

### 16.2 இடைவெளிகளைப் பூர்த்தி செய்வோம்.

i. அ___ உ___து பார்___யைப் பொ___த்த___.

ii. பெ___சிலா___ தா___கவே எ___த மு___யா___.

iii. எ___த எ___தப் பெ___சி___ கூ___மைய___ற___கி வி___ம்.

iv. உ___மையிலே___ நா___ உ___னைப் ப___றித்தா___ எ___துகி___றே___.

## 16.3 பொருத்தமான இரட்டைக்கிளவியை இடைவெளியில் எழுதுவோம்.

i. குழந்தை ____________ எனச் சிரித்தது.

ii. கண்ணாடி ____________ என மின்னியது.


iii. புகையிரதம் ____________ எனச் சென்றது.

iv. நீரோடை ____________ என ஓடியது.

v. பட்டாசு ____________ என வெடித்தது.

பளபள கலகல சலசல கடகட படபட

## 16.4 பொருத்தமான அடைமொழிச் சொல்லைப் பயன்படுத்தி வாக்கியங்களை மீண்டும் எழுதுவோம்.



வெள்ளைப் பசுமையான அழகான நீலவண்ண கனிந்த பச்சைக்



உதாரணம் :- பூனை பாலைக் குடித்தது.

வெள்ளைப் பூனை பாலைக் குடித்தது.

i. புல் வெளியில் பசுக்கள் மேய்கின்றன.

____________________________________________

ii. பழம் கீழே விழுந்தது.

____________________________________________

iii. மயில் தோகை விரித்து ஆடுகின்றது.

____________________________________________

iv. சிறுமி நடனம் ஆடினாள்.

____________________________________________

v. கிளி பழத்தைக் கொத்தியது.

____________________________________________

# 17 தினக்குறிப்பு எழுதுவோம்

சுதன், விவேகானந்தா வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்விபயிலும் ஒரு மாணவன். ஒருநாள் அவனது வகுப்பாசிரியர் தினக்குறிப்பு எழுதும் முறைபற்றியும் அதனால் கிடைக்கும் நன்மைகள்பற்றியும் கலந்துரையாடினார். அத்துடன், மாதிரித் தினக்குறிப்பொன்றை எழுதவும் கற்றுக்கொடுத்தார். பின்னர், வீட்டுவேலையாக ஒரு வாரத்திற்கான தினக்குறிப்பை எழுதி வருமாறு கூறினார். அதற்கமைய சுதன் வாரத்தின் ஒவ்வொரு நாளும் பாடசாலையிலும் வீட்டிலும் வெளியிலும் தான் பெற்ற அனுபவங்களை தினக்குறிப்பில் எழுதினான். சுதனால் எழுதப்பட்ட ஒரு வாரத்திற்கான தினக்குறிப்பு சிறப்பான முறையில் எழுதப்பட்டுள்ளதாக ஆசிரியர் பாராட்டினார். சுதனின் தினக்குறிப்பை நாங்களும் வாசிப்போம். அதன்படி எழுதிப் பழகுவோம்.

**பங்குனி 2018** **திங்கட்கிழமை** **4**

இன்று பாடசாலையில் மாணவர் மன்றம் பி.ப. 12.30 மணிக்கு ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் நான், ‘‘மாணவர் கடமை’’ எனும் தலைப்பில் மூன்று நிமிடங்கள் பேசினேன். அதிபர் எனது பேச்சைப் பாராட்டினார்.

மாலை 4.00 மணியளவில் எங்களது வீட்டிற்கு மாமா வந்தார். பின்னர் என்னுடன் சதுரங்கம் விளையாடினார். அவருடன் விளையாடியதன் மூலம் சதுரங்கம் விளையாடுவதற்கான பல புதிய நுட்பங்களை அறிந்துகொண்டேன்.

இன்றைய நாள் மிகவும் பயனுள்ள நாளாக அமைந்திருந்தது.

## 5 செவ்வாய்க்கிழமை

இன்று காலை நானும் அமீரும் பாடசாலைக்குச் செல்லும்போது பார்வையற்ற ஒருவருக்கு வீதியைக் கடக்க உதவி செய்தோம்.

மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை எங்கள் வீட்டு முற்றத்தில் சலீம், ஜோசப் மற்றும் சீலனுடன் பந்தடித்து விளையாடினேன்.

இன்றைய நாள் உற்சாகமான நாளாகக் கழிந்தது.

## 6 புதன்கிழமை

இன்று வகுப்பாசிரியர் பாடசாலைக்கு வரவில்லை. பதிற் கடமைபுரிய வந்த ஆசிரியர் எங்கள் வகுப்பு மாணவர்களுக்குத் ''தெனாலிராமன் கதைகள்'' என்ற நூலிலுள்ள கதையொன்றைக் கூறினார்.

மாலை 5.00 மணியளவில் மாமாவும் மாமியும் விமலும் வீட்டிற்கு வந்தார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நாங்கள் தொலைக்காட்சியில் சிறுவர் நிகழ்ச்சி பார்த்து மகிழ்ந்தோம்.

இன்றைய பொழுது இனிமையாகக் கழிந்தது.

## வியாழக்கிழமை 7

இன்று தமிழ் மற்றும் கணிதப் பாடங்களுக்கான அலகுப் பரீட்சை நடைபெற்றது.

பி.ப. 5.00 மணியளவில் நண்பன் நிசாரைப் பார்க்க அப்பாவுடன் வைத்தியசாலைக்குச் சென்றேன். அவனது நலம் விசாரித்தேன். கொண்டு சென்ற பழங்களைக் கொடுத்தேன்.

மாலை 6.30 மணியளவில் நானும் அம்மாவும் அப்பாவும் தம்பியும் தங்கையும் மாமா வீட்டுத் திருமண வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டோம். இன்றைய நாள் சற்றுக் களைப்பாகவும் அதேநேரம் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

## வெள்ளிக்கிழமை 8

இன்று பாடசாலைக் காலைக்கூட்டத்திற்கு விசேட பேச்சாளர் ஒருவர் வருகை தந்திருந்தார். அவர், ''ஒழுக்கத்தின் முக்கியத்துவம்'' என்ற தலைப்பில் உரையாற்றினார். அவருடைய உரை என்னுள் மாற்றத்தை ஏற்படுத்தியது.

பாடசாலை முடிந்து வீடு திரும்பியதும் அங்கு எனது தாத்தாவும் பாட்டியும் வந்திருந்தமையைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். மாலை நாங்கள் எல்லோரும் தோட்டத்தில் ஒன்றாக அமர்ந்து பாட்டியிடம் கதைகேட்டு மகிழ்ந்தோம்.

இன்றைய நாள் மறக்கமுடியாத நாளாக அமைந்தது.

## சனிக்கிழமை

## 9

அப்பாவுடன் சந்தைக்குச் சென்றேன். சனிக்கிழமை என்பதால் சந்தையில் சனக்கூட்டம் அலைமோதியது. நாங்கள் காய்கறிகளும் பழங்களும் வாங்கினோம்.

மாலை நேரம் அப்பா என்னையும் தங்கையையும் சிறுவர் பூங்காவிற்கு அழைத்துச்சென்றார். அங்கு சலீமும் மேரியும் சீலனும் தம் பெற்றோருடன் வந்திருந்தனர். அங்குள்ள விளையாட்டு உபகரணங்களில் விளையாடி மகிழ்ந்தோம்.

இன்றைய நாள் புத்துணர்வு தரும் நாளாக அமைந்திருந்தது.

## ஞாயிற்றுக்கிழமை

## 10

இன்று காலை வீட்டைச் சுத்தம் செய்வதற்கு அம்மாவிற்கு உதவி செய்தேன். சுற்றாடல் பாடத்தின் செயன்முறைக்குத் தேவையான பலூன், நூல், போத்தல், குண்டூசி என்பவற்றை எடுத்துப் பாடசாலைப் பையினுள் வைத்தேன். கணிதம் மற்றும் தமிழ்ப் பாடங்களின் வீட்டுவேலைகளைச் செய்து முடித்தேன்.

மாலை அப்பாவுடன் சேர்ந்து தோட்டத்திலுள்ள செடிகளுக்கு நீர் ஊற்றினேன்.

இன்று சலீமின் பிறந்த நாளும் கூட. அவனை வாழ்த்துவதற்காக அவனது வீட்டிற்குச் சென்றேன். அவனை வாழ்த்தி தமிழ் அகராதி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினேன். இன்றைய நாள் நன்னாளாக அமைந்தது.



பயிற்சி

## 17.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. சுதன் விளையாடிய உள்ளக விளையாட்டு யாது?
2. காலைக்கூட்டத்தில் விசேட பேச்சாளர் உரையாற்றிய தலைப்பு எது?
3. பாடசாலையில் உள்ள மன்றம் ஒன்றின் பெயரினைக் குறிப்பிடுக.
4. பதிற்கடமைக்காக வந்த ஆசிரியர் கூறிய கதைநூலின் பெயர் யாது?
5. சுதனிடமிருந்து நீர் அறிந்துகொண்ட நற்பண்புகள் எவை?

## 17.2 சுதனின் ஒரு வாரத்திற்கான தினக்குறிப்பில் உங்களுக்கு பிடித்த ஒரு விடயத்தைத் தெரிந்தெடுத்து எழுதுவோம்.

i. திங்கட்கிழமை ____________________

ii. செவ்வாய்க்கிழமை ____________________

iii. புதன்கிழமை ____________________

iv. வியாழக்கிழமை ____________________

v. வெள்ளிக்கிழமை ____________________

## 17.3 பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுவோம்.

பொன்விழா　　விமானி　　சகோதரர்

ஆசிரமம்　　தேசாபிமானி　　சந்தி　　நாத்திகன்

ஓவியன்　　சகபாடி　　கட்டுக்கதை

i. முனிவர்கள் வசிக்குமிடம் ____________

ii. விமானத்தைச் செலுத்துபவன் ____________

iii. தெருக்கள் சந்திக்குமிடம் ____________

iv. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடும் விழா ____________

v. கடவுள் இல்லை எனக் கூறுபவன் ____________

vi. நம்பமுடியாத கதை ____________

vii. படங்கள் வரைபவன் ____________

viii. ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் ____________

ix. தாய் நாட்டை நேசிப்பவன் ____________

x. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படிப்பவன் ____________

## 17.4 கீழே தரப்பட்ட வாக்கியங்களிலுள்ள அடைமொழிகளை இனங்கண்டு எழுதுவோம்.

i. சின்னத் தேனீ வண்ணப் பூவில் இனிய தேனை உறிஞ்சிக் குடித்தது.

- எழுவாய் அடைமொழி ____________
- செயப்படுபொருள் அடைமொழி ____________
- பயனிலை அடைமொழி ____________

ii. செல்லக் கண்ணன் அழகிய பொம்மையை விரைவாகச் செய்தான்.

- எழுவாய் அடைமொழி ____________
- செயப்படுபொருள் அடைமொழி ____________
- பயனிலை அடைமொழி ____________

iii. பச்சைக்கிளி சிறிய மாம்பழத்தைக் கொத்தித் தின்றது.

- எழுவாய் அடைமொழி ____________
- செயப்படுபொருள் அடைமொழி ____________
- பயனிலை அடைமொழி ____________

# 18 நாம் சென்ற கல்விச் சுற்றுலா





அன்று விடுமுறை நாள். நான்காம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களாகிய நாம் கல்விச் சுற்றுலாவிற்காகக் காலை ஐந்து மணிக்கே பாடசாலைக்கு வந்து விட்டோம். அதிகாலையில் பனித்துளியும் சில்லென வீசும் குளிர்காற்றும் எமக்குப் புத்துணர்ச்சியைத் தந்தன. எம்மை வழியனுப்ப வந்த அதிபர் புன்னகையுடன் எம்மைப் பார்த்து, ''பிள்ளைகளே! மகிழ்ச்சியுடன் சென்று வாருங்கள்.'' என்று வாழ்த்தி வழியனுப்பினார். நாங்கள் எல்லோரும் வரிசையாகச் சென்று பேருந்தின் ஆசனங்களில் அமர்ந்துகொண்டோம்.

பேருந்து, கண்டி வள்ளுவர் வித்தியாலயத்திலிருந்து புறப்பட்டது. கொழும்பு மற்றும் காலியிலுள்ள முக்கியத்துவமிக்க இடங்களைப் பார்வையிடுவதாக எமது சுற்றுலா திட்டமிடப்பட்டிருந்தது.

எமது பேருந்து சற்றுநேரத்தில் பேராதனையைக் கடந்து கொழும்பு வீதியை வந்தடைந்தது. வீதியின் இருமருங்கிலுமிருந்தும் பாதசாரிகள் கையசைத்து எமக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். சிறிது தூரம் சென்றதும் கடுகண்ணாவ மலைத்தொடர் தென்படத் தொடங்கியது. கிழக்கு வானில் சூரியன் தகதகவென மின்னியபடி அம்மலைத் தொடர்களுக்கிடையே எட்டிப் பார்த்தான். தூரத்தே தெரியும் வீதிகள் பாம்புகள் வளைந்து செல்வதுபோலக் காட்சியளித்தன. இவ்வாறாக, நாம் இயற்கையின் விந்தைகளையும் அழகையும் இரசித்தபடி கொழும்பு நகரை வந்தடைந்தோம்.

முதலில், விகாரமகாதேவி பூங்காவிற்குச் சென்று அங்கு காலை உணவை உண்டோம். பின்னர் சிறுவர்களுக்கான விளையாட்டுச் சாதனங்களில் ஏறி விளையாடினோம். அப்பொழுது ''அங்கே பார் அழகிய கட்டடமொன்று தெரிகிறதே!'' என்று கூறினாள் அனீக்கா. அதைக்கேட்ட ஆசிரியர். ''இதுதான் இலங்கையில் தாமரை வடிவிலே அமைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிய கலையரங்கமாகும். இது பராக்கிரமபாகு மன்னனால் பொலனறுவைக் காலத்தில் கட்டப்பட்ட தாமரைத் தடாகத்தின் வடிவத்தை ஒத்தது. இது ஆயிரத்திற்கு மேற்பட்ட இருக்கைகளைக் கொண்டது.'' எனக் கூறினார்.

மாணவர்கள் ஆர்வத்துடன் அதைச் சுற்றிப்பார்த்தனர். அப்போது ஜோன், ''நீர்த்தடாகத்தின் மத்தியில் ஒரு தாமரை மலர் மலர்ந்திருப்பதைப் போன்று இருக்கிறதே!'' என்றான். அதற்கு ஆசிரியர், ''இதனால் தான் இதற்குத் தாமரைத் தடாகம் எனப் பெயர் வந்தது'' என்றார். இறுதியில் எல்லோரும் இக்கலையரங்கின் முன்னால் நின்று புகைப்படம் எடுத்து மகிழ்ந்தோம்.



பின்னர், அங்கிருந்து காலி முகத்திடல் நோக்கிச்செல்லும் வழியில் மிகவும் உயரமான கோபுரத்தைக் கண்டோம்.

அப்போது ஆசிரியர், இதுதான் தாமரைக் கோபுரம். ஏறத்தாழ முந்நூற்றைம்பது மீற்றர் உயரமுடைய இது தெற்கு ஆசியாவிலேயே மிகவும் உயரமானது என்றார்.



பயணம் தொடர்ந்தது. காலிமுகத்திடலை அடைந்தோம். சுற்றிவர வானளாவ உயர்ந்த கட்டடங்களுக்கிடையே கடலை அண்டியதாகப் பரந்துபட்ட மைதானம்போல் காலிமுகத்திடல் காட்சியளித்தது. அங்கே சனக் கூட்டம் நிரம்பிக் காணப்பட்டது. சில பிள்ளைகள் பட்டம் விட்டுக்கொண்டிருந்தனர். சிலர் பந்தடித்து விளையாடினர்.

அங்கிருந்து இலங்கையில் முதலாவதாக நிர்மாணிக்கப்பட்ட தெற்கு அதிவேகப் பாதையினூடாகக் காலிக்குச் செல்லத் தயாரானோம். மின்னல் வேகத்தில் செல்லும் எமது பேருந்தைப் பார்க்க எமக்குப் பயமாகவும் குதூகலமாகவும் இருந்தது. நாம் அனைவரும் விமானத்தில் பறப்பதுபோலப் பாவனை செய்தோம். வீதியின் இரு மருங்கிலும் நீல நிற வீதிக் குறியீடுகளைப் பார்த்தபடியே காலி நகரை அடைந்தோம்.

காலி நகருக்குள் நுழைந்ததுமே இரண்டு அம்சங்களை எங்களால் காணமுடிந்தது. அதில் ஒன்று வானுயர்ந்த கலங்கரை விளக்கு; மற்றையது இன்றும் உறுதியாய் அமையப்பெற்றிருக்கும் காலிக்கோட்டையின் சுவர்.

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

காலி அருங்காட்சியகத்தில் புராதன படகு, மட்பாண்டங்கள், ஆடைகள் போன்ற பொருள்கள் காணப்பட்டன. அவை ஒவ்வொன்றைப்

பற்றியும் ஆசிரியர் விளக்கினார். பின்னர் காலிக்கோட்டையின் நுழைவாயில் வழியாக வெளியே வந்து புற்றரையில் அமர்ந்து பகல் உணவை உண்டோம்.

அங்கிருந்து ஹிக்கடுவைக் கடற்கரைக்குச் சென்றோம். இயற்கை எழில் கொஞ்சும் அக்கடற்கரை பரந்து காணப்பட்டது. கண்ணாடிப் படகுகள் மூலம் கடலுக்குச் சென்றோம். அங்கு பவளப்பாறைகள், வர்ண மீன்கள், வேறு சில கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடற் தாவரங்களையும் பார்வையிட்டோம். நாம் காண்பது கனவா அல்லது நனவா; கடலுக்குள் இவ்வளவு இரகசியம் உள்ளதா? என ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டோம். கடற்கரை மணலில் விளையாடினோம். சூரியன் கடலினுள் மறையும் அழகையும் கண்குளிரக் கண்டு இரசித்தோம்.

‘‘சரி எல்லோரும் வரிசையாகப் பேருந்தில் ஏறுங்கள்’’ என்று ஆசிரியர் அழைத்தார். விருப்பமின்றி எல்லோரும் பேருந்தில் ஏறிக்கொண்டோம். பேருந்து மீண்டும் கொழும்பு வழியாக கண்டியை நோக்கித் தனது பயணத்தைத் தொடங்கியது. இரவு வேளை மீண்டும் பாடசாலையை வந்து சேர்ந்தோம். எமது பெற்றோர் எம் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தனர். இச்சுற்றுலா எமது வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாததொன்றாகும்.





## பயிற்சி

### 18.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. சுற்றுலாவில் மாணவர்கள் கண்டுகளித்த இடங்கள் எவை?
2. பொலனறுவைக்காலத்தில் எம்மன்னனால் தாமரைத் தடாகம் கட்டப்பட்டது?
3. தாமரைத் தடாகம் எனப் பெயர் வந்ததற்கான காரணம் யாது?
4. தெற்காசியாவிலுள்ள மிக உயரமான கோபுரம் எது?
5. ஹிக்கடுவ கடலில் கண்ட காட்சிகள் மூன்று தருக.

### 18.2 பின்வருவனவற்றிற்கான உதாரணங்களைப் பாட நூலிலிருந்து தெரிந்தெடுத்து இடைவெளிகளை நிரப்புவோம்.

i. அடைமொழி - ____________________

ii. இரட்டைக்கிளவி - ____________________

iii. இணைமொழி - ____________________

iv. பெயர்ச்சொல் - ____________________

v. இறந்தகால வினைச்சொல் - ____________________

### 18.3 தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூரணப் படுத்துவோம்.

**இடமிருந்து வலம்**

1. அறிவைத் தருவது
2. இரும்புப் பாதையில் பயணம் செய்வது

**மேலிருந்து கீழ்**

1. நிறங்களில் ஒன்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| | | | | | |
| | | | | | |
| 2 | | | | | |


தமிழ் - 4

### இடமிருந்து வலம்

1. செய்திகளைத் திரட்டித் தருபவர்
2. குலை குலையாக இருக்கும் பழவகைகளில் ஒன்று

### மேலிருந்து கீழ்

1. தூக்கம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்




## 18.4 பின்வரும் சொற்களைப் பெயர்ச்சொற்கள், வினைச் சொற்கள் என அட்டவணைப்படுத்துவோம்.



கண்டி வந்தான் வந்தாய் கமலி படித்தார்கள்
பச்சை பூ உண்டது களைத்தது கண்



| | பெயர்ச்சொற்கள் | வினைச்சொற்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

குறிப்பு :-
- சிறுவர் பத்திரிகைகளில் வரும் குறுக்கெழுத்துப் புதிர்களை குழுக்களாக இணைந்து பூர்த்தி செய்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.
- களப்பயணக் குறிப்பைத் தயாரிப்பதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துக.

# 19 சிறுவர் பத்திரிகை




சிறுவருக்கான பத்திரிகைகள்
நிறைய வேண்டும்.
சித்திரம் எல்லாப் பக்கங்களிலும்
திகழ வேண்டும்.
அறிவைப் புகட்டும் கட்டுரை பலவும்
அமைய வேண்டும்.
தெய்வபக்தி, தேசபக்தி
ஊட்ட வேண்டும்.
சிரிக்க வைக்கும் செய்திகூட
இருக்க வேண்டும்.
ஐயம் தீர்க்கக் கேள்வியும் பதிலும்
அவசியம் வேண்டும்.
அறிஞர் வாழ்வை அழகாய் எடுத்துக்
கூற வேண்டும்.

புத்தம் புதிய கலைகள் எல்லாம்
விளக்க வேண்டும்.
நித்தம் நமது பண்பை மேலும்
உயர்த்த வேண்டும்.
நிலைத்த புகழைப் பெறவே வழிகள்
காட்ட வேண்டும்.
உற்ற நண்பர்போலே அவையும்
உதவ வேண்டும்.
உதவி, உதவி நமது வாழ்வை
உயர்த்த வேண்டும்.
பெற்றோர் அவற்றைக் காசு கொடுத்து
வாங்க வேண்டும்.
பிள்ளைகளுக்குப் பிரியத்துடனே
வழங்க வேண்டும்.



- அழ. வள்ளியப்பா



பயிற்சி

## 19.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. சிறுவர் பத்திரிகையில் இடம்பெறவேண்டிய விடயங்கள் எவை?
2. ஐயம் என்பதன் ஒத்தகருத்துச் சொல் ஒன்று தருக?
3. கலைகள் மூன்றினைக் குறிப்பிடுக?
4. பத்திரிகை யாரைப்போல உதவ வேண்டும்?
5. தேசபக்தி என்றால் என்ன?

## 19.2 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பாடலிலிருந்து தெரிந்து எழுதுவோம்.

i. செய்தித்தாள் - __________

ii. ஓவியம் - __________

iii. புதினம் - __________

iv. வினா - __________

v. கீர்த்தி - __________



## 19.3 "திடசங்கற்பம்" எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு சொற்களை உருவாக்குவோம்.

i. __________

ii. __________

iii. __________

iv. __________

v. __________


## 19.4 பாடலில் அடிக்கோடிடப்பட்ட பெயர்ச் சொற்களின் வகைகளைக் கண்டறிந்து எழுதுவோம்.

கடகட வண்டி மாட்டுவண்டி
கரும்புகை கக்கிடா மாட்டுவண்டி

சல்சல் வண்டி மாட்டுவண்டி
சந்தைக்குச் செல்லும் நல்லவண்டி

ஆண்டுகள் பல சென்றாலும்
வாகாய் ஓடும் மாட்டுவண்டி

வாலை நன்றாய்த் தூக்கியே
காளைகள் ஓடுதல் அழகாகும்.



| | பெயர்ச் சொல் வகை | உதாரணம் |
|---|---|---|
| 1. | பொருட்பெயர் | |
| 2. | இடப்பெயர் | |
| 3. | காலப்பெயர் | |
| 4. | சினைப்பெயர் | |
| 5. | குணப்பெயர் | |
| 6. | தொழிற்பெயர் | |

**குறிப்பு :-**

* இதுபோன்ற வேறு பாடல்கள் அல்லது பந்திகளை வழங்கி அதிலிருந்து பெயர்ச்சொற்களின் வகைகளைக் கண்டறிய மாணவர்களை வழிப்படுத்துக.
* சிறுவர் பத்திரிகை ஒன்றை வகுப்பறையில் காட்சிப்படுத்தி அதன் உள்ளடக்கங்களை மாணவர்கள் அனுபவரீதியாகக் கண்டறிவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள்.

# 20 பலவீனத்தை வென்ற பலசாலி





வில்லியம் ஹோகிங் (Stephen William Hawking) என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வாழ்க்கையில் சாதனை படைக்க எல்லோராலும் முடியும்; உடல் ஊனம் அதற்கு ஒரு தடை அல்ல என்பதை உலகிற்கு நிரூபித்தவர்தான் அவர். ஹோகிங் இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் (Oxford) நகரில் 1942 ஆம் ஆண்டு தை மாதம் எட்டாம் திகதி பிறந்தார். இவர் ப்ராங்க் - இஸபெல் ஐலீன் ஹோகிங் (Frank - Isobel Eileen Hawking) தம்பதியின் மூத்த மகனாவார்.

இவர், இங்கிலாந்தில் உள்ள பைரன் ஹவுஸ், புனித அல்பன் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். சிறுவயது முதலே புதிய கண்டுபிடிப்புகளிலும் கணிதப் பாடத்திலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். அதனால், இவரைப் பாடசாலைக் காலத்தில் 'ஐன்ஸ்டீன்' என்று செல்லமாக அழைத்தனர். 1959ஆம் ஆண்டு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகக் கல்லூரியில்

சேர்ந்தார். அங்கே அவர் பௌதிகவியலும் இரசாயனவியலும் கற்றார். 1966 ஆம் ஆண்டு கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தார். மேலும், இவர் இசையிலும் அறிவியல் புனைகதைகளிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

21ஆம் வயதில் ஹோகிங்கை ''இயக்கு நரம்பணு நோய்'' தாக்கியது. அது குணப்படுத்தவே முடியாத ஒரு கொடிய நோய். இதனால், அவரது கை, கால்களின் இயக்கம் படிப்படியாகப் பாதிக்கப்பட்டது. அவரால் பேசவோ, எழுந்து நடமாடவோ முடியாமல்போனது. அவர் இன்னும் இரண்டு வருடங்களே உயிர் வாழ்வார் என்று மருத்துவர்கள் தீர்க்கமாகக் கூறியிருந்தார்கள்.

ஆனாலும், ஹோகிங் மனம் தளரவில்லை. கணினி மூலமான ''பேச்சுத் தொகுப்பி'' எனும் கருவியின் உதவியால் மற்றவர்களோடு பேசினார். புதிய பல விஞ்ஞான ஆராய்ச்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டார். அவை குறித்துப் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார். சர்வதேச ஆய்வுக் கருத்தரங்குகளிலும் பங்குபற்றினார். விண்வெளிப் பயணத்தினைக்கூட மேற்கொண்டார். அவருக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட நாற்காலியில் அமர்ந்தபடியே இவை அனைத்தையும் அவர் செய்து முடித்தார்.

அவர் எழுதிய அறிவியல் நூல்களில், 'காலத்தின் ஒரு வரலாற்றுச் சுருக்கம்' என்ற நூல் மிகப் பிரபல்யமானது. அவர் ஆழமான அறிவியல் உண்மைகளை மிக எளிய நடையில் எழுதினார். அதனால், அவரது நூல்கள் உலகப்புகழ் பெற்றன. பலரும் அவரது எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டனர்.



ஐன்ஸ்ட்டீன் விருது, அன்ட்ரிவ் கேமன்ட் விருது, எடிங்டன் பதக்கம் முதலான பல விருதுகளை அவர் பெற்றார். 1979 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதவியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பேராசிரியர் ஹோக்கிங் சுமார் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாகப் பல்வேறு உடல் உபாதைகளோடு போராடியபடியே வரலாற்றுச் சாதனைகளைச் செய்தார். இறுதியில், 2018 ஆம் ஆண்டு பங்குனி மாதம் பதினான்காம் திகதி இந்த உலகைவிட்டுப் பிரிந்தார். இறக்கும் போது அவரது வயது எழுபத்தாறு ஆகும் .

அவரது நோயினால் ஏற்பட்ட உடல் ஊனம் அவரது அறிவியல் சாதனைகளுக்குத் தடையாக இருக்கவில்லை. அதற்குக் காரணம், ‘என்னால் சாதித்துக்காட்ட முடியும்’ என்ற அவரது மனத் துணிவுதான். பேராசிரியர் ஹோக்கிங்கின் சாதனை, சாதிக்கத் துடிக்கும் அனைவருக்கும் ஒரு சிறந்த முன்மாதிரி ஆகும்.

**முயன்றால் முடியாதது எதுவுமில்லை.**



**பயிற்சி**

## 20.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. வில்லியம் ஹோகிங் எங்கே? எப்போது? பிறந்தார்.
2. அவர் எழுதிய உலகப்புகழ் பெற்ற நூல் எது?
3. அவர் பெற்ற விருதுகள் இரண்டைக் குறிப்பிடுக.
4. அவர் மற்றவர்களுடன் பேசுவதற்குப் பயன்படுத்திய கருவி எது?
5. வில்லியம் ஹோகிங்கின் வாழ்க்கை எமக்குக் கற்றுத் தரும் படிப்பினை என்ன?

**20.2 பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுவோம்.**

i. மகனாவார் - ______________________

ii. வரலாற்றுச்சாதனை - ______________________

iii. மனத்துணிவு - ______________________

iv. அறிவியல் - ______________________

v. உலகப்புகழ் - ______________________

**20.3 வெற்றிடத்திற்குப் பொருத்தமான, எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுவோம்.**

i. எங்கள் பாடசாலையில் ______________ விழா நடைபெற்றது. (பரிசழிப்பு/ பரிசளிப்பு/ பறிசளிப்பு)

ii. சிறுவர்கள் வாழ்க்கையில் முன்னேற ______________ செய்ய வேண்டும். (முயற்சி/ முயட்ச்சி/ முயற்ச்சி)

iii. ஆதர். சி. கிளாக் வானியல் தொடர்பான ______________ யில் ஈடுபட்டார். (ஆராச்சி/ ஆராய்ச்சி/ ஆராட்சி)

iv. அம்மா உணவு சமைப்பதற்கு ______________ பயன்படுத்தினார். (எண்ணைய்/ எண்ணெய்/ எண்நெய்)

v. நேற்று எனது தம்பிக்குக் ______________ ஏற்பட்டது. (காச்சல்/ காய்ச்சல்/ காய்சல்)

vi. நாம் வெயில் காலங்களில் இயற்கைப் பானமான ______________ அருந்துதல் வேண்டும். (இளநி/ இளனி/ இளநீர்)

**20.4 பின்வரும் வாக்கியங்களைத் தரப்பட்ட வினைச் சொல்லிற்குப் பொருத்தமான வாக்கியங்களாக மாற்றி எழுதுவோம்.**

i. நான் காலை உணவை உண்டேன்.

________________________________ உண்டான்.

ii. ஆசிரியர் நேற்றுப் பாடசாலைக்கு சென்றார்.

________________________________ சென்றார்கள்.

iii. அவள் கலகலவென்று சிரித்தாள்.

________________________________ சிரித்தார்கள்.

iv. யானை மெல்ல மெல்ல அசைந்து அசைந்து வந்தது.

________________________________ வந்தன.

v. நீ பாடம் படித்தாயா?

________________________________ படித்தீர்களா?

**விகடத் துணுக்கு**

***தந்தை*** : ‘‘சீப்புக்கும் வாழைப்பழத் தோலுக்கும் என்ன வித்தியாசம்?’’

***மகன்*** : ‘‘சீப்பு தலையை வாரும்... வாழைப்பழத் தோல் காலை வாரும்...’’



**குறிப்பு :-**

- இவர் போன்ற தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றிய சாதனையாளர்களின் வரலாறு பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறுக.
- யாரேனும் ஒரு சாதனையாளர் பற்றி ஐந்து நிமிட பேச்சொன்றினை வகுப்பில் முன்வைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.

# 21 பௌர்ணமியா? அமாவாசையா?



ஒருநாள் அக்பர் சக்கரவர்த்தி தமது முதன்மை மந்திரி பீர்பாலையும் அவருக்குத் துணையாக மற்றொரு மந்திரியையும் சில பிரச்சினைகளை முடித்துக்கொண்டு வருமாறு அயல் நாட்டிற்கு அனுப்பிவைத்தார்.

பீர்பாலும் மந்திரியும் அந்த நாட்டை அடைந்தனர். அந்நாட்டு அரசருக்கு பீர்பால் பணிவான வணக்கத்தைத் தெரிவித்தார். மேலும், அவரைப் பற்றிப் பல நல்ல செய்திகளையும் எடுத்துக் கூறினார். முடிவில், அவரைப் புகழும் விதமாக அவரைப் பௌர்ணமி நிலவிற்குச் சமமானவர் என்றும் தம்முடைய நாட்டு அரசர் அக்பர் சக்கரவர்த்தியை அமாவாசைக்குச் சமமானவர் என்றும் ஒப்பிட்டார். தம்மை பீர்பால் ‘‘பௌர்ணமி நிலவு’’ என்று புகழ்ந்ததில் அந்த

நாட்டு அரசருக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. அதனால், அவர் பீர்பாலுக்குப் பெறுமதியான வெகுமதிகளை அளித்தார்.

பீர்பாலுடன் சென்ற மந்திரிக்குப் பீர்பால் கூறிய புகழுரைகள் பிடிக்கவில்லை. 'பீர்பால், தமது நாட்டு அரசரை அமாவாசை என்றும் அயல் நாட்டு அரசரை பௌர்ணமி நிலவு என்றும் வர்ணித்ததன் காரணம் யாதாக இருக்கலாம்?' என யோசித்தார்.

நாட்டிற்குத் திரும்பியதும் அந்த மந்திரி அரசரிடம் சென்று பீர்பால், அக்பர் சக்கரவர்த்தியையும் அயல் நாட்டு அரசரையும் புகழ்ந்த விதத்தைப் பற்றிக் கூறினார். இதனைக் கேட்ட அக்பர் சக்கரவர்த்தி மிகவும் துன்பமடைந்தார். பின்னர் பீர்பாலை அழைத்து அவ்வாறு கூறியதற்கான காரணத்தை விளக்குமாறு கேட்டார்.

பீர்பால் அமைதியாக அக்பர் சக்கரவர்த்தியைப் பார்த்து, ''மதிப்பிற் குரிய அரசே! பௌர்ணமி நிலவு என்பது நிலவின் வளர்ச்சியில் இறுதிக் கட்டம். அதற்கு மேல் அது வளராது, வளர முடியாது. அதைப்போலவே அயல் நாடும் ஓர் எல்லை வரை வளர்ந்துவிட்டது. இனிமேலும் அது வளராது. ஆனால், அமாவாசை பௌர்ணமி நிலவு ஆகும்வரை வளர்ந்துகொண்டே செல்லும். அதுபோல் நமது நாடும் உங்களுடைய ஆட்சியும் வளர்ந்து, விரிவடைந்துகொண்டே இருக்கும். அதனாலேயே நான் அந்நாட்டைப் பௌர்ணமி நிலவு என்றும் தொடர்ந்தும் வளரும் நம்நாட்டை அமாவாசை என்றும் கூறினேன்'' என்று விளக்கமளித்தார்.

அவ்விளக்கத்தைக் கேட்ட அக்பர்சக்கரவர்த்தி பலத்த ஆரவாரத்துடன் கைகளைத் தட்டிப் பீர்பாலுடைய கூர்ந்த மதியைப் பாராட்டினார். அவருக்குப் பெறுமதியான பரிசில்களும் கொடுத்து அகமகிழ்ந்தார்.



**பயிற்சி**

## 21.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. அக்பர் சக்கரவர்த்தியின் முதன்மை மந்திரி யார்?
2. பீர்பால் அயல் நாட்டு அரசரைப் பௌர்ணமி என ஏன் புகழ்ந்தார்?
3. பீர்பால் தமது அரசரை அமாவாசை எனப் புகழ்ந்தது ஏன்?
4. ''புகழுரை'' என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக?
5. பௌர்ணமி நிலவு'' என்பதன் ஒத்தகருத்துச் சொல் யாது?

## 21.2 பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுவோம்.

i. பிரதிநிதி - ____________________

ii. பௌர்ணமி - ____________________

iii. சக்கரவர்த்தி - ____________________

iv. வெகுமதி - ____________________

v. ஆரவாரம் - ____________________

**21.3** ''எமது நாடு அழகானது'' எனும் தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுவோம்.

(ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக அமைதல் வேண்டும்).

i. ____________________

ii. ____________________

iii. ____________________

iv. ____________________

v. ____________________

## 21.4 அழைப்பிதழ் ஒன்றை ஆக்குவோம்.

**அழைப்பிதழ்**

விபுலானந்தர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின்

**கலைவிழா**

காலம் : 21.5.2019
நேரம் : காலை 9.00 மணி
இடம் : பாடசாலைக் கேட்போர்கூடம்

இவ் இனிய நிகழ்வினைக் கண்டுகளிக்க வருமாறு
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏற்பாடு - அதிபர், ஆசிரியர், மாணவர் குழாம்

i. இவ்வழைப்பிதழ் எவ்விழாவிற்கானது?

ii. இவ்விழாவின் ஏற்பாட்டாளர்கள் யாவர்?

iii. இவ்விழா எங்கே, எப்போது நடைபெறவுள்ளது?

iv. ''கண்டுகளித்தல்'' என்பதன் பொருள் யாது?

v. அழைப்பிதழ் ஒன்றில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் யாவை?

**விகடத் துணுக்கு**

***முதலாளி*** : ''உனக்கு சொந்த ஊர் எது?''

***தொழிலாளி*** : ''எனக்கு சொந்த ஊர் இல்லை. சொந்த வீடு தான் இருக்கிறது.''



**குறிப்பு :-**
- இவற்றைப் போன்ற வேறு பயிற்சிகளையும் வழங்குக.
- அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிக்குமாறு மாணவர்களை வழிப்படுத்துக.

# 22 படித்துச் சுவைத்த நூல்

(நாவலர் கல்லூரியின் ஆரம்பப்பிரிவுக்கான மாணவர் மன்றம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இவ்வேளையில், "அடுத்த நிகழ்வாக அகிலாவின் பேச்சு இடம்பெறும்" என்று மன்றச் செயலாளர் அறிவித்தார். அகிலா பலத்த கைதட்டல்களுக்கு மத்தியில் மேடையில் ஏறித் தனது பேச்சை ஆரம்பித்தாள்).

இவ்வாய்ப்பைத் தந்த இறைவனுக்கு முதலில் நன்றியை உரித்தாக்குகிறேன். அடுத்ததாக எம்மை நல்வழிப்படுத்தும் அதிபர் அவர்களுக்கும் எமது அறிவுக் கண்களைத் திறந்துவைக்கும் ஆசிரியர்களுக்கும் எனது வணக்கம் உரித்தாகட்டும். அவ்வாறே எனது அன்பான சகோதர சகோதரிகளுக்கும் எனது இனிய காலை வணக்கத்தைக் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்கூறும் நல்லுலகில் குழந்தைகளுக்கான நீதிகளைக் கூறிய பலருள் ஔவையார், பாரதியார் ஆகியோரை இன்னும் நாம் மறக்கவில்லை. அவர்களுள் ஒருவரான ஔவையாரால் எழுதப்பட்ட ஆத்திசூடியைப் பற்றிப் பேசுவதற்காக உங்கள் முன் வந்துள்ளேன்.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். இவ் உலகில் மானிடராய்ப் பிறந்த நாம் சிறப்புடன் வாழ வழி காட்டக்கூடிய அறக்கருத்துக்களைக் கூறும் நூலே ஆத்திசூடியாகும்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நூல்கள் ஔவையாரால் எழுதப்பட்டன. இவற்றுள் மிகச் சுருக்கமான சொற்களால் நீதிசொன்ன ஒப்பற்ற நூலே ஆத்திசூடியாகும். ஆத்திசூடியிலுள்ள அறக் கருத்துக்கள் மனிதரை நல்லவராகவும் ஒழுக்கமுள்ளவராகவும் மனித நேயம் மிக்கவராகவும் வெற்றியாளராகவும் மாற்றக்கூடியனவாகும்.

ஆத்திசூடி, கற்பதற்கு மிக எளிமையாகவும் இனிமையாகவும் இருக்கும். அதனால் எம்மைப்போன்ற சிறுவர்கள் இதை விரும்பிக் கற்கமுடியும். எந்தச் செயலாக இருந்தாலும் அது தருமம் சார்ந்ததாக அமைய வேண்டும். நாம் தருமம் செய்ய விரும்பி விட்டால் எமது சொல், செயல், சிந்தனை யாவும் அறம் சார்ந்தே அமையும். இதனாலேயே ஔவையார் முதலில் "அறம் செய விரும்பு" என்றார்.

கோபத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டால் சிறப்பாக வாழலாம். இதனை, "ஆறுவது சினம்" என இரண்டாவதாக வலியுறுத்தியுள்ளார். அத்தோடு, நம்மால் முடிந்ததைப் பிறருக்குக் கொடுத்து உதவுவதுடன், விடாமுயற்சியுடனும் வாழ வேண்டும். இதனையே "இயல்வது கரவேல்" என்றும் "ஊக்கமது கைவிடேல்" என்றும் அழகாகக் கூறியுள்ளார்.

ஆத்திசூடி நல்ல பல கருத்துக்களைக் கூறுகின்ற ஒரு நூலாகும். எல்லோரிடமும் இனிமையாகப் பேசவேண்டும். உரிய நேரத்தில் உரிய செயலைச் செய்து முடிக்க வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசக் கூடாது. உயர்ந்த குணத்தை எந்த நிலையிலும் கைவிடக்கூடாது. இவைபோன்ற கருத்துக்களை அது கூறுகின்றது. இக்கருத்துக்கள் சிறுவர்களான எமக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்கும் பெரும் பயன்தரக் கூடியனவாகும்.

ஆத்திசூடியானது எவ்வயதுச் சிறுவர்களும் மனனம் செய்யக்கூடிய வகையில் சிறுசிறு சொற்றொடர்களாக அமைந்துள்ளது. இந்த நீதிநூலை நாமும் கற்று வாழ்வில் சிறப்புறுவோமாக! என்றுகூறி உங்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிறேன்.

நன்றி.

நன்மை கடைப்பிடி
நாடொப்பன செய்.

## மேலதிக அறிவுக்கு

### ஆத்திசூடியும் - பொருளும்

1. கண்டொன்று சொல்லேல்.
   (பார்க்காதவற்றைப் பார்த்ததாகப் பேசாதே.)
2. ஞயம்பட உரை.
   (இனிமையாகப் பேசு.)
3. இணக்கம் அறிந்து இணங்கு.
   (ஒருவரின் குணங்களை அறிந்து நட்புக்கொள்ள வேண்டும்.)
4. சித்திரம் பேசேல்.
   (பொய்யானவற்றை மெய்போல் பேசாதே.)
5. தேசத்தோடு ஒட்டி வாழ்.
   (உன் நாட்டு மக்களுடன் ஒற்றுமையாக வாழ்.)
6. நுண்மை நுகரேல்.
   (நோயைத் தரும் சிற்றுண்டிகளை அதிகமாக உண்ணாதே.)
7. நேர்பட ஒழுகு.
   (ஒழுக்கம் தவறாமல் நேர்வழியில் நட.)
8. பேதைமை அகற்று.
   (அறியாமையைப் போக்கு.)
9. பெரியாரைத் துணைக்கொள்.
   (அறிவில் சிறந்த பெரியோர்களைத் துணையாகக் கொள்.)
10. வித்தை விரும்பு.
    (கல்வியாகிய நற்பொருளை விரும்பு.)





பயிற்சி

## 22.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. ஔவையாரால் எழுதப்பட்ட நூல்கள் எவை?
2. ஆத்திசூடி கூறும் அறக் கருத்துக்கள் இரண்டு தருக.
3. நீதி நூல்களைப் பாடியவர்களுள் இருவரின் பெயர்களை எழுதுக.
4. நாம் செய்யும் செயல்கள் எதைச் சார்ந்ததாக அமைய வேண்டும்.
5. ‘‘ஆறுவது சினம்’’ என்பதன் கருத்து யாது?

## 22.2 பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் அமைப்போம்.

i. இனிமையாகப்/ பேச/ எல்லோரிடமும்/ வேண்டும்

_______________________________

ii. நீதிநூலைக்/ நாமும்/ கற்று/ சிறப்புறுவோம்/ வாழ்வில்

_______________________________

iii. ஆத்திசூடியானது/ மிக/ இனிமையாகவும்/ கற்பதற்கு/ இருக்கின்றது /எளிமையாகவும்

_______________________________

iv. செயலைச்/ வேண்டும்/ உரிய/ நேரத்தில்/ உரிய/ செய்து/ முடிக்க

_______________________________

v. கற்றுக்/ கோபத்தைக்/ வாழலாம்/கொண்டால்/கட்டுப்படுத்தக்/ சிறப்பாக

_______________________________

**22.3 பொருத்தமான சொற்களைத் தெரிந்தெடுத்து இடைவெளிகளை நிரப்புவோம்.**

i. கூண்டின் ________________ கிளி இருந்தது.
வீட்டின் ________________ நாய் இருந்தது. (வெளியே/உள்ளே)

ii. சேர்ந்து வாழ்வது ________________ ஆகும்.
பிரிந்து வாழ்வது ________________ ஆகும். (பலம்/பலவீனம்)

iii. ஆசிரியர் மாணவர்களிடம் ________________ எழுப்பினார்.
மாணவர்கள் சரியாக ________________ அளித்தனர்.
(வினா/விடை)

iv. சூரியன் ________________ உதிக்கும்.
________________ மறையும். (காலையில்/ மாலையில்)

v. விளக்கின் ________________ எங்கும் பரவியது.
அமாவாசை நாளில் ________ நிறைந்திருக்கும். (இருள்/ஒளி)

**22.4 சுயவிபரப் படிவத்தைப் பூர்த்தி செய்வோம்.**

1. முழுப்பெயர் - ________________
2. முதலெழுத்துக்களுடன் பெயர் - ________________
3. முகவரி - ________________
4. பிறந்த திகதி - ________________
5. வயது - ________________
6. கற்கும் பாடசாலை - ________________
7. கற்கும் தரம் - ________________
8. தந்தையின் பெயர் - ________________
9. தாயின் பெயர் - ________________
10. தொலைபேசி இலக்கம் - ________________

மாணவர் கையொப்பம் ________________

## 22.5 பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக எழுதுவோம்.

i. பறவைகள் பறந்து சென்றன.
பறவைகள் உணவு தேடின.
பறவைகள் பறந்து ______________________ உணவு தேடின.

ii. நான் பாடம் படித்தேன்.
நான் வினாக்களுக்கு விடை எழுதினேன்.
_______________________________________

iii. சூரியன் அதிகாலையில் கிழக்கில் உதிக்கும்.
சூரியன் மாலையில் மேற்கில் மறையும்.
_______________________________________

iv. நாங்கள் கல்விச்சுற்றுலா சென்றோம்.
நாங்கள் பின்னவல யானைகள் சரணாலயத்தைப் பார்த்தோம்.
_______________________________________

v. குயில்கள் இனிமையாகக் கூவின.
மயில்கள் அழகாக ஆடின.
_______________________________________

குறிப்பு :-
- மேலே குறிப்பிடப்பட்டவை போன்ற வேறு பயிற்சிகளையும் வழங்குக.
- ஆத்திசூடியை மனனஞ்செய்ய மாணவர்களை வழிப்படுத்துக.

# 23 செம்மொழியாம் தமிழ் மொழி




மொழியைப் பேசுவது மனிதனுக்குரிய சிறப்புகளில் ஒன்று. தமது எண்ணங்களையும் உணர்வுகளையும் பிறருக்கு அறியச் செய்வது மொழியாகும். உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளன. அவற்றுள் சில மொழிகளே செம்மொழியாகப் புகழ்பெற்றுள்ளன. அம்மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும்.

தமிழ் மொழி பேசுவதற்கு எளிமையானது. தமிழ் மொழி கேட்பதற்கு இனிமையானது. தமிழ் இலக்கியங்கள் ஓசைநயம், சொல்வளம், பொருட்செறிவு கொண்டவை. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று தமிழ் மொழியின் இனிமையை சுப்பிரமணிய பாரதியார் வியந்து பாடியுள்ளார்.

தமிழ் மொழி மிகவும் வளமானது; அது காலத்திற்கேற்ப மாற்றங்களைப் பெற்றுத் தன்னை நிகழ்நிலைப்படுத்திக்கொள்ளும். தமிழ் மொழி பேசவும் வாசிக்கவும் எழுதவும் வசதியான மொழி. தமிழ் மொழியின் பல்வகைச் சிறப்புகளுள் அதன் சொற் சிறப்பும் குறிப்பிடத்தக்கது. பாகற்காய் கசப்புச் சுவையுடையது. அதனை 'கசப்புச் சுவையுடைய காய்' என்று நேரடியாகக் கூறாமல், பாகற்காய் (பாகு + அல் + காய் = இனிப்பு அல்லாத காய்) என்று சிறப்பாகக் கூறும் மொழியே தமிழ் மொழி.

தமிழ் மொழி இலக்கிய, இலக்கண வளம் நிறைந்த மொழி. சொல்வளம்மிக்க மொழி. ஒரு பொருளின் பல்வேறு நிலைமைகளுக்கும் வெவ்வேறு பெயர் சூட்டுவது தமிழ் மொழியின் சிறப்பாகும். எடுத்துக்காட்டாக ஒரு பூவின் தோற்றம் முதல் உதிர்வு வரையான ஏழு நிலைகளையும் அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல் எனத் தனித்தனிப் பெயர் கொண்டு அழைப்பதைக் குறிப்பிடலாம்.

தமிழில் ஓர் எழுத்து ஒரு சொல்லாகிப் பொருள் தருவதும் உண்டு. உதாரணமாக ஆ - பசு, தீ - நெருப்பு, கோ - அரசன், பா - பாட்டு, பூ - மலர், கை - கரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதேபோல ஓர் எழுத்துச் சொல் பல பொருளைத் தருவதும் உண்டு. உதாரணமாக 'மா' எனும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருளைத் தருகின்றது. இவ்வாறாகச் செழுமையான பொருட் சிறப்பும் சொல்வளமுமிக்கது தமிழ் மொழியாகும்.

தமிழுக்கு முத்தமிழ் எனும் சிறப்புப் பெயரும் உண்டு. இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் எனும் முத்தமிழையும் தன்னகத்தே கொண்ட சிறப்பிற்குரிய மொழி இதுவாகும். முத்தமிழானது மனிதர்களின் எண்ணம், உள்ளம், உணர்வு ஆகிய மூன்றையும் ஒன்றிணைத்து வாழ்வை நல்வழிப்படுத்துகிறது.



தமிழ் மொழி காலத்தால் அழியாதது. இது தேவைக்கேற்பத் தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்ளும். இன்றைய விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சிக்கேற்ப தமிழில் புதிய புதிய கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இணையம், முகநூல், புலனம், கட்செவி அஞ்சல், தம்படம், மின்னஞ்சல், தேடுபொறி, தொடுதிரை போன்ற சொற்களை இதற்கு எடுத்துக்காட்டாகக்கூறலாம். மூத்த மொழியான தமிழ் மொழி கணினி, இணையம் போன்றவற்றில் பயன்படும் வகையில் புதுமொழியாகவும் திகழ்கிறது.

இத்தகைய செழுமையும் செம்மையும் உடைய தமிழ் மொழியைக் கற்பதால் நாம் பெருமையடைகின்றோம். ஆதலால்,

இப்பெருமைக்குரிய தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் பங்காற்ற வேண்டியது எமது கடமையாகும்.

### அரும்பதம்

| | | | |
|---|---|---|---|
| இணையம் | Internet | தம்படம் | Selfie |
| மின்னஞ்சல் | e-mail | முகநூல் | Facebook |
| புலனம் | WhatsApp | கட்செவி அஞ்சல் | Voicemail |
| தேடுபொறி | Search engine | தொடுதிரை | Touch screen |





### பயிற்சி

## 23.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. மனிதனின் சிறப்பியல்பு யாது?
2. மொழியின் சிறப்பியல்பு யாது?
3. தொழினுட்ப வளர்ச்சிக்கேற்ப தமிழில் இணைந்துகொண்ட புதிய கலைச்சொற்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
4. ‘‘முத்தமிழில் ’’ அடங்குவன எவை?
5. தமிழ் மொழியின் சிறப்புக் குறித்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



## 23.2 சரியான சொல்லைத் தெரிந்தெடுத்து எழுதுவோம்.

i. சோம்பேரி / சோம்பேறி - ____________________

ii. பொறுப்பாளி / பொறுப்பாலி - ____________________

iii. இனையம் / இணையம் - ____________________

iv. செவிப்பன்னி / செவிப்பண்ணி - ____________________

v. தொளைபேசி / தொலைபேசி - ____________________

**23.3 பின்வரும் வாக்கியங்களில் உள்ள அடுக்குத்தொடரின் கீழ் கோடிடுவோம்.**

i. ஆமை மெல்ல மெல்ல ஊர்ந்து சென்றது.

ii. நான் வண்ண வண்ணப் பறவைகளைக் கண்டு இரசித்தேன்.

iii. தேனீக்கள் சின்னச் சின்னப் பூக்களில் தேனை அருந்தின.

iv. ஆட்டுக்குட்டி துள்ளித் துள்ளி வேகமாக ஓடியது.

v. அமலன் தொட்டியில் இருந்த நீரை அள்ளி அள்ளிக் குளித்தான்.

**23.4 பின்வரும் தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக எழுதுவோம்.**

i. நான் காலையில் எழுந்து அப்பாவிற்கு உதவி செய்தேன்.

நான் காலையில் ________________

நான் அப்பாவிற்கு ________________

ii. கோடை காலம் ஏற்பட்டதால் பயிர்கள் நீர் இன்றி வாடின.

________________

________________

iii. ஓவியன் ஓவியத்தை வரைய குயவன் பானையை வனைந்தான்.

________________

________________

iv. எமது தாய்நாட்டையும் பாடசாலையையும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

________________

________________

v. கல்வியில் கவனஞ் செலுத்துவதும் விளையாட்டுக்களில் அக்கறை காட்டுவதும் அவசியம்.

________________

________________

# 24 பாரதியுடன் ஒரு பொழுது

தமிழினி நீண்ட நாட்களாக மூடி வைத்திருந்த அறையைத் திறந்தாள். எங்கும் ஒரே தூசும் குப்பைகளுமாய் இருந்தன. பொறுமையாக அறையைச் சுத்தம் செய்யத் தொடங்கினாள். அப்போது அலுமாரிக்கு அடியில் அவள் மெல்லக் குனிந்து பார்த்தாள். அங்கே ஒரு புத்தகம் விழுந்து கிடப்பதைக் கண்டாள். அதனைக் கையில் எடுத்தாள். அதுவோ தூசு படிந்தும் முன் அட்டை மடிந்தும் இருந்தது. தூசைத் தட்டித் துடைத்தாள். முன் அட்டையைக் கையால் நீவி விட்டாள். புத்தக அட்டையில் இருந்த ''பாரதியார் பாடல்கள்'' என்ற தலைப்பை எழுத்துக் கூட்டி வாசித்தாள்.



என்ன ஆச்சரியம்! அவள் அப்பெயரை வாசித்தவுடன் அறை முழுவதும் பேரொளி பரவி அங்கு பாரதியாரின் உருவம் தோன்றியது. முண்டாசு கட்டிய சுப்பிரமணிய பாரதியாரை அவள் நேரில் பார்க்கிறாள். முறுக்கு மீசையும் ஒளிரும் கண்களும் கனிந்த முகமுமாய்... ஆஹா! தமிழினியின் கண்கள் வியப்பால் விரிந்தன. அகமும் முகமும் மகிழ்ச்சியால் மலர்ந்தன. ஆம்! பாரதியார் அவளோடு பேசவும்

பின்னர் பாப்பா பாடலைப் பாடவும் தொடங்கிவிட்டார்.

‘‘ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்லலாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு
தீங்கு வரமாட்டாது பாப்பா.’’

என்று பாடிக் காட்டினார். அதுமட்டுமா? ‘‘தமிழினி! உன் அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவக் குழந்தைகளோடு தினமும் விளையாடு. யாரோடும் பகைமை கொள்ளாதே! இந்த நாட்டில் உள்ள எல்லோரும் ஒரு தாய் மக்கள். அதைத்தான் நான் என் பாட்டிலும் சொல்லி இருக்கிறேன். அதைக் கேட்கிறாயா தமிழினி?’’ என்று கேட்டார். பாரதியாருக்குத் தன் பெயரும் தெரிந்திருக்கிறதே! தமிழினிக்கு ஒரே ஆச்சரியம். அவள் ‘சரி’ என்பது போல மெல்லத் தலையசைத்தாள்.

புத்தகத்தின் மறுபக்கம் தானாகவே திறந்து கொண்டது. கம்பீரமான குரலில் பாரதியார் மீண்டும் பாடத் தொடங்கினார்:

‘‘வெள்ளை நிறத்தொரு பூனை
எங்கள் வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை
அவை பேருக்கொரு நிறம் ஆகும்

சாம்பல் நிறத்தொரு குட்டி,
கரும் சாந்தின் நிறம் ஒரு குட்டி
பாம்பின் நிறமொரு குட்டி
வெள்ளைப் பாலின் நிறம் ஒரு குட்டி

எந்த நிறமிருந்தாலும்
அவை யாவும் ஒரே தரம் அன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும்
இஃது ஏற்றம் என்றும் சொல்லலாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்
அதில் மானுடர் வேற்றுமை இல்லை
எண்ணங்கள் செய்கைகள் யாவும்
இங்கு யாவர்க்கும் ஒன்றென காணீர்!''

தமிழினிக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. அவள் தன்னை மறந்து கை தட்டினாள். அதைக் கண்டு பாரதியார் புன்னகைத்தார்.

''மகளே தமிழினி! நீ பெண் பிள்ளை என்று காரணம் சொல்லி, படித்தது போதும் என்பார்கள். ஆனால், நீ ஒருபோதும் உன் படிப்பைக் கைவிட்டு விடாதே. நன்றாகப் படித்து முன்னேறு. உன் கல்வியால் மற்றவர்களுக்கு உதவி செய். தெய்வம் ஒன்றே என்பதை உணர்ந்துகொள். எல்லாச் சமயத்தவரையும் ஒன்றுபோல் நேசி. அன்பு என்பதே உயர்வான அறம்; அதுவே சிறந்த ஒழுக்கம் என்பதையும் ஒருபோதும் மறவாதே!'' என்றார். இதைக்கேட்ட தமிழினி ''நீங்கள் சொன்னதை எல்லாம் எப்போதும் நினைவில் வைத்திருப்பேன் பாரதியாரே!'' என்று உறுதியான குரலில் சொன்னாள்.

அப்போது, யாரோ அந்த அறையை நோக்கி வரும் சத்தம் கேட்டது. உடனே அங்கு சூழ்ந்திருந்த ஒளி மங்கியது. பாரதியார் சட்டென மறைந்து விட்டார். அவள் அறைக் கதவுப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அறை வாசலில் அவளது அம்மா முகத்தில் புன்னகையோடு நின்றார்.



## பயிற்சி

### 24.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. தமிழினி கண்டெடுத்த நூலின் பெயர் என்ன?
2. இன ஒற்றுமையை வலியுறுத்த பாரதியார் கூறிய அறிவுரைகள் எவை?
3. பாரதியார் பெண் பிள்ளைகளுக்கு கூறும் அறிவுரை யாது?
4. ''வெள்ளை நிறத்தொரு பூனை...'' என்று பாடலினூடாகப் பாரதியார் கூற நினைப்பது யாது?
5. ''சுப்பிரமணிய பாரதியார்'' என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுக ?

### 24.2 பாடத்திலிருந்து தெரிந்தெடுத்த சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புவோம்.

i. வண்ணங்கள் எனும் சொல்லினை ஒத்தொலிக்கும் சொல் ________

ii. இடப்பெயர்ச் சொல் ________

iii. ஒற்றுமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ________

iv. அரவம் என்பதன் ஒத்தகருத்துச் சொல் ________

v. எண்ணம் என்பதன் பன்மைச் சொல் ________



### 24.3 கீழே தரப்பட்ட நிகழ்வைப் பூரணப்படுத்தி எழுதுவோம்.

கலாமும் ராமுவும் மாணவர்கள். அவர்கள் பாடசாலை விட்டு வீடு செல்லும்போது, பிள்ளைகளே! என அழைக்கும் சத்தம் கேட்டது. உடனே அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்...

________


________

________

## 24.4 கீழே தரப்பட்ட வழிகாட்டல்களை வாசித்து, ஆசிரியரின் உதவியுடன் ஆக்கம் செய்து மகிழ்வோம்.


1

குறித்த அளவுடைய வட்டம் ஒன்றை வெட்டி எடுப்போம். அதில் கண்கள், அலகு என்பவற்றை வரைவோம். புள்ளிக்கோட்டின் வழியே பின்புறமாக மடிப்போம்.




2

உருவில் உள்ளவாறு புள்ளிக் கோடிடப்பட்ட பகுதியைப் பின்புறமாக மடிப்போம். இது தலைப்பகுதியாகும்.




3

அதே அளவான இன்னுமொரு வட்டத்தை வெட்டி எடுப்போம். படத்தில் காட்டியவாறு நிழற்றிச் சிறகுகள் செய்து கொள்வோம்.




4


செவ்வகம் ஒன்றை வெட்டிக்கொள்வோம். அதனை உருளை வடிவாக ஒட்டினால் உடற்பகுதி தயாராகும்.




5 இலக்கம் மூன்றில் வெட்டிய சிறகுகளை உடலின் பின்புறமாக ஒட்டிக் கொள்வோம்.



6 இன்னுமொரு செவ்வகத்தை வெட்டிக் கொள்வோம். படத்தில் காட்டியவாறு புள்ளிகோட்டின் வழியே வால் பகுதியை வெட்டி எடுப்போம்.



7 வெட்டியெடுத்த வால் பகுதியை உடலின் பின்புறமாக ஒட்டிக் கொள்வோம். சிறிய கால்களை இணைப்போம். இப்போது ஓர் அழகிய காகிதப் பறவை உங்கள் கைகளில் இருக்கும்.



## தேவையான பொருள்கள்

1. வர்ணக் கடதாசி
2. பென்சில்
3. கத்தரிக்கோல்
4. பிசின்
5. அடிமட்டம்